# வேளாண்மை
# நிதி நிலை அறிக்கை
# 2024-25

**மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் அவர்களே,**

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர் (திருக்குறள்-1033)**

உழுதுண்டு வாழ்பவர்களே உயர்ந்த வாழ்வினர்; ஏனென்றால், மற்றவர்கள் அவர்களைத் தொழுதுண்டு வாழ வேண்டியிருக்கிறது.

மற்ற சமூகங்கள் உழவர்களையும் உழைப்பாளர்களையும் சமூக நிலையில் கடைசி இடத்தில் வைத்திருக்கும்போது, நம் தமிழ்ச் சமூகம் உழவர்களை உச்சத்தில் வைத்து உச்சி முகர்ந்ததையும், '**உண்டி கொடுத்தோரை உயிர் கொடுத்தோராகப்**' போற்றியதையும் நம் தமிழ் இலக்கியங்கள் தெள்ளெனக் காட்டுகின்றன. இதனை ஒட்டியே, இந்த அரசும் உழவர்களை உச்சத்தில் வைத்து, வேளாண்மைக்கெனத் தனி நிதி நிலை அறிக்கையினைத் தயார் செய்து சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. உழவர்கள் வாழ்வு வளம்பெற வேண்டும் என்ற நோக்கோடு செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்கி, இத்துறையின் 2024-2025-ஆம் ஆண்டிற்கான தனி வேளாண் நிதிநிலை அறிக்கையினை இம்மாமன்றத்தில் அளிப்பதில் பெருமிதம் கொள்கின்றேன்.

முதன்முறையாக ஒன்றை உருவாக்குவது கடினம்; அதை வளர்ந்திடச் செய்வது எளிது; பாதை அமைப்பது கடினம்; பயணம் செய்வது எளிது. நாங்கள் தமிழ்நாட்டின் வரலாற்றில் இல்லாத வேளாண்மை நிதிநிலை அறிக்கையை உருவாக்கி

அளித்து, எண்ணற்ற முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். இந்த வேளாண் நிதிநிலை அறிக்கையானது உழவர்தம் வாழ்க்கையை மேன்மேலும் வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் என்று உறுதியாக நம்புகிறேன்.

"**மேழி பிடிக்கும்கை வேல்வேந்தர் நோக்கும்கை**
**ஆழி தரித்தே அருளும்கை - சூழ்வினையை**
**நீக்கும்கை என்றும் நிலைக்கும்கை நீடூழி**
**காக்கும்கை காராளர் கை**"

ஏர்ப்பிடித்து உழவு செய்யும் உழவரின் கைகளே, மக்களின் பசிப்பிணியைப் போக்கி நீடூழி வாழ வைக்கும் கைகள் என்று கம்பர் உழவுத் தொழிலை மிகவும் உயர்த்தி "**திருக்கை வழக்கம்**" என்ற நூலில் சிறப்பிக்கிறார்.

முழுமுதல் காப்பியமாம் சிலப்பதிகாரத்தில், வேளாண்மை பற்றியும், அதன் நுட்பங்கள் பற்றியும் விளக்கியுள்ளார் இளங்கோவடிகள். மன்னராட்சியும், மக்கள் பண்பாடும் நிலைக்க வேண்டுமாயின், அந்நாடு வேளாண்மையில் சிறப்புற விளங்க வேண்டும். மன்னனும், மக்களும் உழவர்களை எதிர்நோக்கியே வாழ்கிறார்கள் என்பதனை,

"**இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்**
**உழவிடை விளைப்போர்**"

**(சிலப்பதிகாரம் – நாடுகாண்காதை - 150)**

-என்று குறிப்பிடுகிறார்.

இதைத்தான், அமெரிக்காவின் முதல் அதிபரான ஜார்ஜ் வாஷிங்டன் அவர்களும், "மனிதன் ஆற்றக்கூடிய தொழில்களிலேயே மிகவும் நலமிக்கதும், பயனுள்ளதும்,

உன்னதமானதுமான தொழில் வேளாண்மையாகும்" (**Agriculture is the most healthful, most useful and most noble employment of man**) என்று வழிமொழிகிறார்.

அல்லும் பகலும், அயராது உழைத்து, உலகோரின் அச்சாணியாகத் திகழும் மேன்மையுடைய, வேளாண் பெருங்குடி மக்களைப் போற்றும் விதமாக, வேளாண்மை கடந்துவந்த பாதைகளை இம்மாமன்றத்தில் பகிர்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நமது வரலாற்று ஆவணங்களில் விலங்குகளை வேட்டையாடுதல், கால்நடைகளை வளர்த்தல் ஆகியவற்றைக் கற்கால மனிதர்கள் மேற்கொண்டதற்கான தகவல்களோடு "**மெய்திரி வகையின் எண்வகை உணவில் செய்தியும் வரையார்**" என்று தொல்காப்பியர் கூறியுள்ளதிலிருந்து நெல், புல்லரிசி, காடைக்கண்ணி (சிறுதானியம்), உளுந்து, அவரை போன்றவற்றைப் பயிரிட்டுள்ளதற்கான ஆதாரங்கள், ஆய்வாளர்களின் ஆய்வுக் குறிப்புகளிலிருந்து காணமுடிகின்றது. பின்னர், பட்டறிவாலும், படிப்பறிவாலும் பயிர் வளர்ப்பு தொடர்பான நுணுக்கங்கள் பெறப்பட்டுள்ளதையும் அறிய முடிகின்றது.

மேலும், நம் முன்னோர்கள் பயிர் செய்வதும், உணவு உண்பதும் என்று மேலோட்டமான வாழ்வை வாழாது, ஒவ்வொரு செயலுக்கும் முக்கியத்துவம் அளித்து, ஒவ்வொன்றையும் நுணுகி ஆராய்ந்து, நுட்பமாகக் கண்டறிந்து, தங்களுடைய வேளாண் அறிவை வளர்த்துக்கொண்டிருப்பதை சங்க இலக்கியங்கள் மூலம் மிக எளிதாக நாம் உணரலாம்.

உணவு உற்பத்தியின் உன்னதத்தை உலகப் புகழ்பெற்ற பசுமைப்புரட்சி விஞ்ஞானி **பாரத ரத்னா எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள்**, "**எதிர்காலம் தானியங்களை அதிகம் கொண்ட நாடுகளுக்கு உரியதே தவிர, துப்பாக்கிகளை அதிகம் கொண்ட நாடுகளுக்கு அல்ல**" (The future belongs to nations with grains and not guns) என்று தெரிவித்துள்ளார்.

வேளாண் பெருங்குடி மக்கள், தங்களின் உழைப்பிற்கேற்ற பலன்களைப் பெறவேண்டும் என்ற நோக்கத்தில், வேளாண்மையை வருமானம் ஈட்டக்கூடிய தொழிலாக மாற்றி, உழவர்களின் நலனைப் பேணிக்காக்க நேசக்கரத்துடன் பல உன்னதத் திட்டங்களை வழங்கி, நடைமுறைப்படுத்தி வருபவர் நமது **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.**

வேளாண்மைத் துறையை, "**வேளாண்மை – உழவர் நலத்துறை**" எனப் பெயர் மாற்றம் செய்து, வேளாண் உற்பத்தியுடன் நின்று விடாமல், உழவர் பெருமக்களின் நலனிற்கு முக்கியத்துவம் அளித்தவரும் நம்முடைய **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்தான்.**

**வேளாண் தொழிலில் சவால்களை எதிர்கொண்டு வரும் விதம்**

வேளாண்மையில் தற்போதுள்ள சவால்களைச் சாதனைகளாக மாற்றி, அதன் மூலம் விவசாயிகளின் நலனைப் பேணிக் காத்திட, பல அரிய திட்டங்கள் வேளாண்மை-உழவர் நலத்துறையால் கடந்த மூன்று ஆண்டுகளில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வேளாண்மைக்கான தொலை நோக்குத் திட்டங்களைச் செயல்படுத்தியதன் காரணமாக 2020-2021-இல் 152 இலட்சம் ஏக்கராக இருந்த மொத்த சாகுபடி பரப்பு, 2022-2023-ஆம் ஆண்டில் 155 இலட்சம் ஏக்கராக உயர்ந்துள்ளது.

அரசால் செயல்படுத்தப்பட்ட சீர்மிகு திட்டங்களால், மகிழ்ச்சி அடைந்த விவசாயிகள், ஊக்கத்துடன் செய்திட்ட சாகுபடியால், 2022-2023-ஆம் ஆண்டில் 116 இலட்சத்து 91 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உணவு தானிய உற்பத்தி அதிகரித்துள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளில் நிறைவேற்றப்படாமல் கிடப்பிலிருந்த பாசன மின் இணைப்பிற்கான விண்ணப்பங்கள், கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, நடப்பாண்டிலும் மேலும் 50,000 மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வேளாண் தொழிலை மேற்கொள்ள இளைஞர்களிடம் ஆர்வம் ஏற்படுத்துவது மிகவும் அவசியம். இளைஞர்கள்தான், எந்த ஒரு நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கும் முதுகெலும்பாவர். வேளாண் சார்ந்த தொழில்களின் முன்னேற்றத்தில் இளைஞர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும் என்பதால், 2021-2022-ஆம் ஆண்டு முதல் 268 வேளாண் பட்டதாரிகள் தேர்வு செய்யப்பட்டு தலா ஒரு இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டு, அக்ரி கிளினிக் உள்ளிட்ட வேளாண் சார்ந்த

தொழில்களைத் தொடங்கி நடத்தி வேளாண்மைக்கு வலு சேர்த்து வருகின்றனர்.

வேளாண் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைத்திட நம்முடைய அரசு பல்வேறு சீரிய முயற்சிகளை எடுத்துள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் குறைந்தபட்ச ஆதரவு விலைக்குமேல் சன்ன இரகத்திற்கு குவிண்டால் ஒன்றிற்கு 107 ரூபாயும், சாதாரண இரகத்திற்கு குவிண்டால் ஒன்றிற்கு 82 ரூபாயும் ஊக்கத் தொகையாக அளிக்கப்பட்டு, விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு, 45 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. பயறுவகைகள், கொப்பரைத் தேங்காய் ஆகியவையும் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படுவதால் விலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகள் பாதுகாக்கப்படுகின்றனர்.

கடந்த ஆண்டு, கரும்பிற்கு ஒரு மெட்ரிக் டன்னிற்கு ஊக்கத்தொகையாக 195 ரூபாய் வீதம் 260 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைத்திட ஏதுவாக உழவர் சந்தைகள், மின்னணு சந்தைகள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் ஆகியவை செயல்படுகின்றன. இதனால், வேளாண் பெருங்குடி மக்களின் விளைபொருட்களுக்கு நல்ல விலை அளிக்கப்பட்டு, அவர்களுக்கான வாய்ப்புகள் மேன்மேலும் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயிர் சாகுபடியில், இடுபொருட்களுக்கான செலவினத்தைவிட, வேளாண் பணிகளுக்கான ஊதியம் தற்போது அதிகமாக உள்ளது. இதனை எதிர்கொள்ள, வேளாண் பணிகளுக்குத் தேவையான அனைத்து வகையான வேளாண் இயந்திரங்களும், கருவிகளும் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், வேளாண் இயந்திர வாடகை மையங்கள் மூலமாக வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் வாடகைக்குப் பெற்றுப் பயனடையும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

விளைபொருட்களில் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைத் தடுத்திட ஏதுவாக, இந்த அரசு, புதிய குளிரூட்டப்பட்ட கிடங்குகள், தானிய சேமிப்புக் கிடங்குகள், உலர்களங்கள் உள்ளிட்ட வசதிகளை அமைத்துக் கொடுக்கும் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கடந்த மூன்று ஆண்டுகளில் அளிக்கப்பட்ட வேளாண் நிதிநிலை அறிக்கை - ஒரு பார்வை**

கடந்த மூன்று ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட அனைத்துத் திட்டங்களும் சரிவரச் செயல்படுத்தப்பட்டு, எதிர்பார்த்த பலன்களைத் தந்துள்ளன. நீண்ட காலத் திட்டங்களுக்கான பணிகள் தகுந்த மேற்பார்வையில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

வேளாண்மை-உழவர் நலத்துறைத் திட்டங்களோடு, உழவர் நலன் தொடர்புடைய பிற துறைத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து கலைஞரின் அனைத்துக் கிராம

ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் கடந்த மூன்று ஆண்டுகளில் 7,705 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு, இதுவரை, 23,237 ஏக்கர் பரப்பளவில் வேளாண் பயிர்களும், 3,587 ஏக்கர் பரப்பளவில் பழமரக்கன்றுகள், மரங்கள் முதலியவையும் நடப்பட்டு, தரிசு நிலங்கள் நிரந்தர சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. 1,202 ஆதிதிராவிட, பழங்குடியின விவசாயிகளுக்கு ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள் நிறுவப்பட்டுள்ளதுடன், **1,564 பண்ணைக் குட்டைகளும் அமைக்கப்பட்டு பாசனப்பரப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 4,773 குளங்கள், ஊருணிகள், வரத்துக்கால்வாய்கள் எல்லாம் இத்திட்டத்தின் மூலம் தூர்வாரப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன.**

எளியோரையும் ஏற்றமடையச் செய்யவேண்டும் என்ற நோக்கில் ஆதிதிராவிடர், பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள், பசுமைக் குடில், ஒருங்கிணைந்த பண்ணையம் போன்ற உயர் மதிப்புத் திட்டங்களுக்கு 20 சதவீதம் கூடுதல் மானியம் வழங்கும் திட்டம் 2022-2023-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் மிகுந்த வரவேற்பினைப் பெற்றதால், 2022-2023, 2023-2024-ஆம் ஆண்டுகளில், அறிவிக்கப்பட்ட 17 கோடி ரூபாயை விடக் கூடுதலாக 9 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 4,980 ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகள் பலனடைந்துள்ளனர்.

தமிழ்நாடு முழுவதும் நீர் நிலைகளைத் தூர் வாரியும், புனரமைத்தும், சீரமைத்து, புதிய நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை ஏற்படுத்தி, மழை நீரை வீணாக்காமல் சேமித்து, நிலத்தடி நீரைச் செறிவூட்டியதால், நுண்ணீர்ப்பாசனம் போன்ற தொழில்நுட்பங்களைப் பரவலாக்கி, பாசன நீரின் பயன்பாட்டினை அதிகரித்ததால் **2020-2021-ஆம் ஆண்டில் 89 இலட்சத்து ஆறாயிரம் ஏக்கராக இருந்த பாசனம் பெற்ற பயிர் பரப்பு, 2022-2023- ஆம் ஆண்டில் 95 இலட்சத்து 39 ஆயிரம் ஏக்கராக உயர்ந்துள்ளது.**

**பேரவைத்தலைவர் அவர்களே!**

கடந்த மூன்று ஆண்டுகளில் அளிக்கப்பட்ட வேளாண் நிதிநிலை அறிக்கைகளானவை பாலன், மீளி, மறவோன், திறவோன் போன்று தவழ்ந்து, நடந்து, ஓடிவிளையாடி நம்மை மகிழ்வித்தன. இந்த நான்காம் வேளாண் நிதிநிலை அறிக்கையானது புதுத்தெம்பு கொண்டு பொலிவுடன் தாவிக் குதிக்கும் குழந்தையாக உள்ளது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். மூன்றாம் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அனைத்து அறிவிப்புகளுக்கும் அரசாணை வெளியிடப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் பயன்கள் அனைத்தும் தொடர்ந்து உணரப்படுகின்றன. மேலும், 2024-2025-ஆம் ஆண்டிற்கும் தகுந்த புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.

**உழவர் நலன்**

பருவநிலை மாற்றத்தின் காரணமாக, தமிழ்நாட்டில் புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைப் பேரிடர்கள் ஆண்டுதோறும் நேரிட்டு பயிர் உற்பத்தியையும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் வெகுவாகப் பாதிக்கின்றன.

இத்தகைய இயற்கை இடர்ப்பாடுகளினால் ஏற்படும் வருவாய் இழப்பிலிருந்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காத்திட, 25 இலட்சம் விவசாயிகளுக்கு **பயிர்க் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகையாக** இந்த அரசு பொறுப்பேற்றது முதல் இதுவரை, 4,436 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதில் விதைப்பு பொய்த்தல் இனத்தில் அறிவிக்கை செய்யப்பட்ட சம்பா நெற்பயிருக்கு 2022-2023, 2023-2024-ஆம் ஆண்டுகளில் பயிர் இழப்பு ஏற்பட்ட அதே ஆண்டிலேயே இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில், கடந்த 2022-2023-ஆம் ஆண்டில், தென்மேற்குப் பருவமழை காலத்தில் பெய்த கனமழை, மாண்டஸ் புயல், வடகிழக்குப் பருவமழை காலத்தில் பெய்த கனமழை, பருவம் தவறிப் பெய்த மழை, வறட்சி, கடந்த மார்ச் 2023-இல் பெய்த ஆலங்கட்டி மழை ஆகிய இயற்கைப் பேரிடர்களால் ஏற்பட்ட பயிர்ச் சேதத்திற்கு, 380 கோடியே 40 இலட்சம் ரூபாய் நிவாரணத்தொகை, 4 இலட்சத்து 50 ஆயிரம் விவசாயிகளுக்கு மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. குறுவைப் (காரீஃப்) பருவத்தில் ஏற்பட்ட மகசூல் இழப்பு, மிக்ஜாம் புயல்,

மக்காச்சோளப்பயிரில் ஏற்பட்ட மகசூல் இழப்பு ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட ஒரு இலட்சத்து 85 ஆயிரம் விவசாயிகளுக்கு 118 கோடியே 77 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், கோடை மழை, தென்காசி மாவட்டத்தில் தென் மேற்குப் பருவமழை காலத்தில் மழை குறைவால் ஏற்பட்ட மகசூல் இழப்பு, **தென் மாவட்டங்களில் 2023-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட பெருமழை போன்ற இயற்கைப் பேரிடர்களால் ஏற்பட்ட பயிர் சேதத்திற்கு 208 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிவாரணத்தொகை, 2 இலட்சத்து 74 ஆயிரம் விவசாயிகளுக்கு விரைவில் வழங்கப்படும்.**

மேட்டூர் அணையில் குறைந்த அளவே தண்ணீர் இருந்தபோதிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரிய நிகழ்வாக மேட்டூர் அணையிலிருந்து 03.02.2024 அன்று டெல்டா பாசனத்திற்காக 3 டி.எம்.சி தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டதால், பாதிக்கும் நிலையிலிருந்த சுமார் 25,000 ஏக்கர் சம்பா நெற்பயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளது.

பல்வேறு உழவர் நலன் குறித்த திட்டங்கள், வேளாண் இயந்திரங்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள், தொழில்நுட்பக் கருத்தரங்குகள் கொண்ட மாபெரும் கண்காட்சிகள் சென்னையிலும், திருச்சியிலும் நடைபெற்றன. இவற்றில் மொத்தமாக, இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான

விவசாயிகளும் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களும் பார்வையிட்டு, பங்கேற்றுப் பயனடைந்தனர்.

**சாதனைகள்**

இருபோகச் சாகுபடிப் பரப்பை இருமடங்காக்கும் முயற்சியில், 2022-2023-ஆம் ஆண்டு 35 இலட்சத்து 15 ஆயிரம் ஏக்கராக இருபோகச் சாகுபடிப் பரப்பு உயர்ந்துள்ளது. கரும்புப் பயிரில் உயர் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து எக்டருக்கு 111 மெட்ரிக் டன் உற்பத்தித்திறனுடன் தமிழ்நாடு, தேசிய அளவில் முதலிடத்தில் உள்ளது.

நடப்பாண்டில் ஏற்பட்ட பல்வேறு இயற்கை இடர்ப்பாடுகளுக்கிடையிலும், **114 இலட்சத்து 19 ஆயிரம் ஏக்கர்** பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2023-2024-ஆம் ஆண்டில் 127 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தியினை எட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கடந்த மூன்றாண்டுகளைப் போலவே, இந்த ஆண்டும் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த சிறப்புப் பிரதிநிதிகள், விவசாயிகள், விவசாயச் சங்கங்கள், கரும்பு விவசாயிகள் சங்கங்கள், விவசாய இடுபொருள் விற்பனையாளர்கள் சங்கம், உழவர் உற்பத்தியாளர் குழுக்கள், உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள், இயற்கை விவசாயிகள், தோட்டக்கலை விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், வேளாண்

இயந்திரங்கள் தயாரிப்பு நிறுவனப் பிரதிநிதிகள், வேளாண் வணிகர்கள், வேளாண் ஏற்றுமதியாளர்கள், முட்டை, பால் உற்பத்தியாளர்கள், கடல்சார் மீனவர்கள், உள்நாட்டு மீனவர்கள், வேளாண் வல்லுநர்கள் ஆகியோரின் கருத்துகளை நேரடியாகவும் மனுக்கள், மின்னஞ்சல் மூலமாகவும் பெற்று அவர்கள் கருத்துகளுக்கும் ஏற்ப 2024-2025-ஆம் ஆண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கை அளிக்கப்படுகிறது.

## வேளாண்மைத்துறை

### 1) முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் (CM MK MKS)

**இந்த நிதிநிலை அறிக்கையில், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் என்ற புதிய திட்டத்தினை இப்பேரவையில் அறிவிப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.**

வேளாண்மைக்கு மண்ணே ஆதாரம். பயிர் வளர்ச்சிக்கு அடிப்படை மண். பயிர்களுக்கு தேவையான ஊட்டச்சத்துகளை கிடைக்கக்கூடிய வடிவில் அளிப்பதும் மண்தான். பயிர்களின் வளர்ச்சி, மண்ணின் வளத்தைச்சார்ந்தே அமைகிறது. இதைத்தான்,

*“சாரல் சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு”*

என்னும் குறுந்தொகைப்பாடல், மண்வளம் செழிப்பாக இருந்ததால்தான் மரங்களில் பெரிய பலாப்பழங்கள் காய்த்துத் தொங்கின என்று கூறியுள்ளது.

பண்டைய காலத்தில் காடுகளைத் தேவைக்கேற்ப அழித்து வேளாண்மை செய்தபோது நாளடைவில் உற்பத்தி குறைந்தது. அது மண்வளம் குன்றியதால் ஏற்பட்டது என்பதை உணர்ந்தே நம் மூத்தகுடிகள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து வேளாண்மை (Shifting Cultivation) செய்தனர் என்பதை அறியமுடிகிறது. பின்னர், எரு இடுதலின் மூலம் மண் வளத்தைக் கூட்டலாம் என்பதை,

"**கவைக்கதிர் வரகின் அவைப்புறு வாக்கல்**
**தாதெரு மறுகிற் போதொடு பொதுளிய**"

-என்று புறநானூறு கூறுவதிலிருந்து அறியலாம்.

தற்போதுள்ள தொழில்முறை வேளாண்மையில், ஒரே பயிரைத் தொடர்ந்து சாகுபடி செய்வதாலும், மண்ணிலிருந்து சத்துகளை அதிகம் உறிஞ்சும் பயிர்களைச் சாகுபடி செய்வதாலும், மண்ணின் வளம் குறைந்து கொண்டே வருகிறது. இது தவிர, உற்பத்தி அதிகரிப்பிற்கென அதிக அளவில் இரசாயன உரங்கள், களைக்கொல்லிகள், பூச்சிக்கொல்லிகள் போன்றவற்றைப் பயன்படுத்துவதால் மண்ணிலுள்ள நுண்ணுயிர்களின் எண்ணிக்கை குறைந்து மண் வளமும் நலமும் குன்றியுள்ளன. நிலங்கள் பாழ்பட்டு அதிக அளவில் களர், உவர், அமில நிலங்களாக மாறியுள்ளன. தொடர்ந்து இதே நிலை நீடித்தால் மலடான மண்ணைத்தான் நம் எதிர்காலத் தலைமுறையினருக்கு நாம் விட்டுச்செல்லும் நிலை ஏற்படும்.

வேதிப்பொருட்களின் எச்சம் இல்லாத வேளாண் விளைபொருட்களே நமக்கு நல்லுணவு, அருமருந்து. நல்ல

உணவே உடல் நலன் காக்கும், அதுவே மக்களுக்கு நல்வாழ்வு தரும் என்பதால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மண்வளத்தைப் பேணிக்காக்கவும், மக்கள் நலன் காக்கும் விதமான உயிர்ம வேளாண்மை போன்ற அனைத்து வேளாண் செய்முறைகளையும் ஊக்கப்படுத்திடவும் பெரும் திட்டம் ஒன்றைத் தீட்டப்பணித்தார்கள். இதற்கென, "**முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம்**" **என்ற புதிய திட்டம், 2024-2025-ஆம் ஆண்டில், 22 இனங்களுடன் 206 கோடி ரூபாய் நிதியில் செயல்படுத்தப்படும்.**

i) மண்ணில் கரிம கார்பன் உள்ளிட்ட அனைத்துச் சத்துகளும் சரிவிகிதத்தில் இருந்தால் மட்டுமே நுண்ணுயிர்கள் பல்கிப்பெருகி, பயிர்களுக்கு ஊட்டச்சத்துகள் எளிதாகக் கிடைக்கப்பெற்று மகசூல் அதிகரிக்கும். எனவே, **பசுந்தாள் உர உபயோகத்தினை விவசாயிகளிடையே ஊக்குவித்து** மண்வளம் காக்கும் வகையில், ஆயக்கட்டு, இறவைப் பாசனப் பகுதிகளில், **முதற்கட்டமாக 2024-2025-ஆம் ஆண்டில் 2 இலட்சம் ஏக்கரில் பசுந்தாள் உரம் பயிரிட 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதனால், தமிழ்நாட்டிலுள்ள 2 இலட்சம் விவசாயிகள் பயனடைவர்.**

ii) "**தொல்லது விளைந்தென நிலம் வளம் கரப்பினும்**"

விளையும் நிலத்திற்கு எரு இடாவிட்டால், வயல் விளைச்சலை மறுத்துவிடும் என்று புறநானூறு பகர்கிறது. மேழிச்செல்வம் குறைந்து வரும் நிலையில், மாட்டுச் சாணத்தோடு, வேளாண் கழிவுகளையும் மக்கச் செய்து கிடைக்கும் மண்புழு உரம் முக்கியத்துவம் பெறுகிறது. மண்புழு

உரம், வளமான ஊட்டச் சத்துகளை வழங்குவதோடு மட்டுமின்றி, மண்ணின் தன்மையையும் மேம்படுத்துகிறது. எனவே, மண்புழு உரம் தயாரித்து மண்வளத்தை மேம்படுத்திட, ஒரு விவசாயிக்கு இரண்டு மண்புழு உரப்படுக்கைகள் வீதம் 10,000 விவசாயிகளுக்கு வழங்கிட 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், நிரந்தர மண்புழு உரத் தொட்டிகள் அமைத்து, தொடர்ந்து மண்புழு உரம் தயாரிக்க ஏதுவாக, 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

iii) மண்ணின் வளம் குறித்து அறிந்து, அதற்கேற்ப உரமிடுவதற்காக, விவசாயிகள் "**தமிழ் மண்வளம்**" இணையதளம் வழியாக மண் வள அட்டைகளைப் பதிவிறக்கம் செய்து, தாங்கள் தேர்வு செய்துள்ள பயிர்களுக்கேற்ப உரப் பரிந்துரைகளையும் பெற்றுப் பயனடைந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் மண் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டு, சமச்சீர் உரப் பரிந்துரை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். 2024-2025-ஆம் ஆண்டில் 2,482 கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் 2 இலட்சம் விவசாயிகளின் நிலத்தில் மண்பரிசோதனை செய்து மண்வள அட்டையும், மண்வள மேம்பாட்டிற்கான பரிந்துரையும் வழங்கப்படும். இவ்வாறு, **இரசாயன உரங்களின் பயன்பாட்டினைக் குறைத்து மண்ணின் வளம் காக்க, 6 கோடியே 27 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

iv) களர் நிலத்தில், மண் இறுகியும் காற்றோட்டம் இல்லாமலும், அமில நிலத்தில் நுண்ணுயிர்ச் செயல்பாடுகள் குறைந்தும், பயிர் வளர்ச்சியும், மகசூலும் குறைந்தும் காணப்படுகிறது. இதனைச் சீர்செய்யும் பொருட்டு, **37,500 ஏக்கர் களர் நிலங்களைச் சீர்ப்படுத்த 7 கோடியே 50 இலட்சம் ரூபாயும், 37,500 ஏக்கர் அமில நிலங்களைச் சீர்ப்படுத்த 15 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்படும்.**

v) திரவ உயிர் உரங்களைப் பயிர்களுக்கு வழங்குவதால் தழை, மணி, சாம்பல், துத்தநாகச் சத்துகளை எளிதில் அளித்து இரசாயன உரச் செலவைக் குறைத்து, சராசரியாக 10 முதல் 20 சதவீதம் கூடுதல் வருவாய் பெறமுடியும். இதற்கென, **2 இலட்சம் விவசாயிகளுக்கு 10 இலட்சம் ஏக்கரில் இடுவதற்காக, 5 இலட்சம் லிட்டர் உயிர் உரங்கள், 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் வழங்கப்படும்.**

vi) தமிழ்நாட்டில் முக்கிய வேளாண் பயிரான நெற்பயிரில், ஒவ்வொரு நாளும் வேளாண் விரிவாக்கப் பணியாளர்களால் விவசாயிகளுடன் இணைந்து, "**வயல் சூழல் ஆய்வு**" மேற்கொள்ளப்பட்டு, நன்மை செய்யும் பூச்சிகளின் எண்ணிக்கை, தீமை செய்யும் பூச்சிகள், நீர் மேலாண்மை முறைகள், மண்ணின் வளம், பயிர்களின் வளர்ச்சி நிலைகள், சுற்றுச்சூழல் போன்றவற்றின் அடிப்படையில் பூச்சி மேலாண்மை செய்வது குறித்து விவசாயிகளுக்கு உரிய அறிவுரைகளும் பரிந்துரைகளும் வழங்கப்படும். இதனால் பயிர்பாதுகாப்பு மேம்படுத்தப்பட்டு, இரசாயனங்களின் பயன்பாடு பெருமளவு குறைக்கப்படும். மண்நலம் காக்கப்படும்.

vii) அசாடிராக்டின் மூலப்பொருளைக்கொண்ட வேம்பிலிருந்து கிடைக்கும் பொருட்கள், சுற்றுச்சூழல் பாதிப்பு இல்லாமல் பூச்சி, நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்த வல்லவை. வேப்பிலை பசுந்தழை உரமாகவும் பயன்படுகிறது. **வேம்பினைப் பரவலாக்கம் செய்திடும் வகையில் 10 இலட்சம் வேப்ப மரக்கன்றுகள் வேளாண்காடுகள் திட்டத்தில் இலவசமாக விநியோகிக்கப்படும். இதற்கென 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

viii) இயற்கையிலேயே உயிரி பூச்சிக்கொல்லி பண்புகளுடைய ஆடாதொடா, நொச்சி போன்ற தாவர வகைகளின் 50 இலட்சம் செடிகளைத் தரிசு நிலங்களிலும் வயல் பரப்புகளிலும் நடவு செய்து பரவலாக்கம் செய்திட ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

ix) பழங்காலத்தில் நம் தமிழர்கள் நல்ல உணவுப் பழக்க வழக்கத்தினாலேயே நல்வாழ்வு வாழ்ந்தனர். இதனை ஊக்குவிக்கும் விதமாக, நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தவல்ல சீவன் சம்பா போன்ற மருத்துவ குணம் கொண்ட பாரம்பரிய நெல் இரகங்கள், 2024-2025-ஆம் ஆண்டில் 1,000 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யும் வகையில் விதை விநியோகம் செய்யப்படும்.

x) **நெல் ஜெயராமன் அவர்களின் மரபுசார் நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கத்தில்** பாரம்பரிய நெல் இரகங்களான அறுபதாம் குறுவை, பூங்கார், தூயமல்லி, சீரகசம்பா, மாப்பிள்ளை சம்பா, சீவன் சம்பா, கருப்புக்கவுனி, போன்றவற்றின் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு

விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இத்திட்டத்தில் 2023-2024-ஆம் ஆண்டில் 20,979 விவசாயிகள் பாரம்பரிய நெல் இரகங்களை 12,400 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்து பயனடைந்தனர். 2024-2025-ஆம் ஆண்டில் மாநில அரசு விதைப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு, 2025-2026-ஆம் ஆண்டில், 10,000 ஏக்கரில் சாகுபடி செய்யும் வகையில் 200 மெட்ரிக் டன் விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும். இதற்கென, 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

xi) புரதம், நார்ச்சத்து, கால்சியம், இரும்புச்சத்து, வைட்டமின்கள் ஆகியவை அதிகம் உள்ள பாரம்பரிய சிறுதானியங்கள், பயறு வகைகள் இரத்தத்தில் சர்க்கரை அளவினைக் கட்டுக்குள் வைத்திருக்கவும், உடல் எடையைக் குறைக்கவும், நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கவும் செய்கின்றன. எனவே, சேலம், கரூர் மாவட்டங்களில் தலைவிரிச்சான் சோளம், வெள்ளை சோளம், இருங்கு சோளம், செஞ்சோளமும், தூத்துக்குடி மாவட்டத்தில் காக்காச்சோளமும், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை மாவட்டங்களில் வெண்சுருட்டை கேழ்வரகு, கருஞ்சுருட்டை கேழ்வரகு, கரிக்கட்டை கேழ்வரகு, பூவாடன் கேழ்வரகு, குருவிக்காரன் கம்பு, காட்டுக்கம்பு, தட்டை வரகு, பெரும்சாமை, சடை சாமை, சிட்டன் சாமை, கருஞ்சிட்டன் சாமை, நாட்டுத் துவரை, மலைத்துவரை ஆகியவற்றையும், திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களில், நாட்டு உளுந்து, கொடி உளுந்து ஆகிய இரகங்களின் விதைகளையும் கண்டறிந்து சேகரித்து, அரசு மாநில விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு

பாரம்பரிய இரகங்கள் பாதுகாக்கப்படும். இவை, புதிய இரகங்களை உருவாக்கிடவும், பயன்பாட்டிலுள்ள இரகங்களை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படும்.

xii) உயிர்ம வேளாண்மைக்கான திட்டங்கள், சான்றளிப்பு முறைகள், நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வு, இயற்கை இடுபொருட்கள் தயாரிப்பிற்கான பயிற்சிகள், உயிர்ம வேளாண் பொருட்களைச் சந்தைப்படுத்துதல் போன்ற செயல்பாடுகள், அனைத்து விவசாயிகளுக்கும் சென்றடைய வேண்டும் என்பதற்காக, வட்டாரத்திற்கு ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, **உயிர்ம வேளாண்மைக்கான மாதிரிப் பண்ணை உருவாக்கப்பட்டு இதர விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கப்படும். இதற்கென 38 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

xiii) 2023-2024-ஆம் ஆண்டில், 36 மாவட்டங்களில் 35,815 ஏக்கர் பரப்பில் உருவாக்கப்பட்ட 725 உயிர்ம வேளாண் தொகுப்புகளுக்கு இரண்டாம் ஆண்டிற்கான ஆதரவு வழங்கிட, 27 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு முழுமையான உயிர்ம வேளாண் சான்றுடன் கூடிய உயிர்ம வேளாண்மை உறுதி செய்யப்படும். இதனால் விவசாயிகளுக்கு விதைப்பு முதல் நேரடி சந்தைப்படுத்துதல் வரை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, கூடுதல் இலாபம் பெற்றிட வழிவகை செய்யப்படும்.

xiv) உயிர்ம வேளாண்மைக்கு இன்றியமையாத, பஞ்சகவ்யம், ஜீவாமிர்தம், மண்புழு உரம், அமிர்தக்கரைசல், மீன்அமிலம் போன்றவற்றைத் தயாரித்து விற்பனை செய்ய ஆர்வமுள்ள 100 குழுக்களுக்கு இயற்கை இடுபொருள்

தயாரித்தல் மையம் அமைத்து ஊக்குவிக்க, ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

xv) விவசாய நிலங்களில் நீடித்த பசுமைப்போர்வை இயக்கத்தில் 24 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவினத்தில், ஒரு கோடியே 96 இலட்சம் மரக்கன்றுகள் 72,597 விவசாயிகளுக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்டன. விவசாய நிலங்களில் வளர்க்கப்படும் வேளாண் காடுகள், நிரந்தரப் பசுமைப் போர்வையினை உருவாக்குவதோடு, இலாபம் தரும் பண்ணைத் தொழிலாகவும் விளங்குகின்றன. 2024-2025-ஆம் ஆண்டில் தரமான மரக்கன்றுகள் உற்பத்தி செய்திடவும், மரக்கன்றுகள் உற்பத்தி செய்யும் நாற்றங்கால்களை வலுப்படுத்துவதற்காகவும் சிறிய, பெரிய, உயர் தொழில்நுட்ப (ஹை-டெக்) நாற்றங்கால்கள் அமைப்பதற்கு **வேளாண்காடுகள் திட்டத்தில், 13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

xvi) ஒருங்கிணைந்த பண்ணையத்தினால், விவசாயிகள், பயிர் சாகுபடியுடன் கறவை மாடுகள், ஆடுகள் வளர்த்தல், பழ மரங்கள், தேனீ வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல் போன்ற வேளாண் சார்ந்த பணிகளையும் மேற்கொண்டு தற்சார்புடன் கூடிய வாழ்வாதார முன்னேற்றத்தினை அடையமுடியும். கடந்த மூன்று ஆண்டுகளில், 40,888 ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகள் 142 கோடி ரூபாய் மானியத்தில் அமைக்கப்பட்டு, 40,888 விவசாயிகள் பயனடைந்து அவர்களது வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது. **2024-2025-ஆம் ஆண்டில்**

**14,000 ஒருங்கிணைந்த பண்ணைய தொகுப்புகள் அமைத்திட, 42 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

xvii) தமிழ்நாட்டில் சுமார் 60 இலட்சத்து 62 ஆயிரம் ஏக்கர் மானாவாரி நிலங்களில் நெல், சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துப் பயிர்கள், பருத்தி, தோட்டக்கலைப் பயிர்கள் ஆகியவை சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. பெரும்பாலும் சிறு, குறு விவசாயிகளால் சாகுபடி செய்யப்படும் இந்நிலங்கள் ஊட்டச்சத்துக் குறைபாடும், குறைந்த நீர்ப்பிடிப்புத்திறனும் கொண்டதாக உள்ளதால், நிலத்தடி நீர் குறைந்து பயிர் உற்பத்தித் திறனும் வெகுவாகக் குறைந்து காணப்படுகிறது.

இம்மானாவாரி நிலங்களில் விவசாயிகள் இலாபகரமான பயிர் சாகுபடி மேற்கொள்வதற்கு ஏதுவாக, உழவு மேற்கொள்ளவும், சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துக்கள் பயிரிட விதைகளும் வழங்கப்படும். 2024-2025-ஆம் ஆண்டில், மூன்று இலட்சம் ஏக்கரில் இத்திட்டத்தை செயல்படுத்த, 36 **கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

xviii) காய்கறிகள், பழங்களின் தினசரி நுகர்வு மக்களிடையே மிகவும் குறைவாகவே உள்ளது. எனவே, வீட்டுத் தோட்டத்தில் ஊட்டச்சத்துமிக்க பழச்செடிகள் வளர்ப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு வாழை, பப்பாளி, முருங்கை, கறிவேப்பிலை போன்ற செடிகள் வழங்கப்படும். இதனால் பூச்சிக் கொல்லிகள் இல்லாத, நச்சுத்தன்மையற்ற பழங்கள், காய்கறிகள் கிடைக்கும். இத்திட்டத்திற்கென 4 **கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

xix) "**தேனீக்களின் தனித்துவம் அவை தித்திக்கும் தேனைத் திரட்டுவதால் மட்டுமல்ல; மலர்களுக்குள் மகரந்தச்சேர்க்கை நிகழ்த்துவதால்தான்**". மக்களின் உடல்நலத்தில் தேனீ வளர்ப்பின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில், **3 கோடியே 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் தேனீ முனையம் உருவாக்கப்படும்.** இத்திட்டத்தில், தேன் பரிசோதனைக் கூடமும் தேன், தேன் சார்ந்த பொருட்களைப் பதப்படுத்தும் கூடங்களும் அமைக்கப்பட்டு, தேனீ வளர்ப்போர்க்கு உரிய பயிற்சிகளும் அளிக்கப்படும்.

xx) **காலநிலை மாற்றம்,** அடுத்த 20 ஆண்டுகளில் பல்லுயிர்ப் பரவல், பயிர் உற்பத்தி, உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றைப் பாதிக்கக்கூடும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் குறைப்பதற்கும், வேளாண் உற்பத்தியைக் குறையாமல் பாதுகாத்திடவும், உரிய தொழில்நுட்பங்கள் பரவலாக்கப்பட வேண்டும். அதற்காக, தமிழ்நாட்டில் சிறப்பு வேளாண் கிராமங்களை உருவாக்கி, இத்தொழில்நுட்பங்கள் குறித்து விரிவாக்க அலுவலர்கள், விவசாயிகள் உள்ளிட்டோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி பரவலாக்கம் செய்யப்படும். இதற்கென, **ஒரு கோடியே 48 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

xxi) வேளாண்மையில் நீடித்த உற்பத்தித் திறனைப் பெற்றிட மண்ணின் தொடர்ச்சியான வளமைத்திறன், நிலையான உற்பத்தித்திறன் ஆகியவை

மதிப்பிடப்படவேண்டும். மண்ணிலுள்ள கரிமச்சத்து, நுண்ணுயிர்களின் கலவை ஆகியவற்றைப் பொறுத்தே மண்ணின் வளம் அமைகிறது. மண்ணின் வளத்தை மேம்படுத்திட **பயிர்க்கழிவுகள் உள்ளிட்ட கரிமப் பொருட்களை வேகமாகச் சிதைத்து** கரிமச்சத்தின் அளவை உயர்த்தவும், கிடைக்காத நிலையிலுள்ள **சத்துகள் கிடைக்கப் பெறவும்,** பயனுள்ள நுண்ணுயிர்க் கலவையை உருவாக்கிட ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் செயல்திறனும் மதிப்பிடப்படும். இதற்கென, **ஒரு கோடியே 39 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

xxii) உழவர்சந்தைகளில் விற்பனை செய்வதைப் போன்று தரமான வேளாண் விளைபொருட்கள், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் எளிதில் நகர்ப்புர நுகர்வோரைச் சென்றடைய, நிர்ணயிக்கப்பட்ட தர அளவுகளின்படி விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்து, தரம்பிரித்து, சிப்பம்கட்டி, முத்திரையிட்டு விற்பனை செய்ய ஏதுவாக 100 **உழவர் அங்காடிகள்,** 5 **கோடி ரூபாய் மாநில நிதியில் செயல்படுத்தப்படும்.**

**முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம்,** 2024-2025-**ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும். 2024-2025-ஆம் ஆண்டிற்கு மொத்தம் 206 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**2) கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்.**

ஒவ்வொரு சிற்றூரும் தன்னிறைவு பெற்று முன்மாதிரியாகத் திகழவேண்டும் என்ற நோக்கில், முதன்மைத் தொழிலான உழவுத் தொழிலை மேம்படுத்தி, நிகர சாகுபடிப் பரப்பை அதிகரித்திட தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றி விவசாயிகளுக்குத் தந்திட "கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்" எனும் திட்டம் 2021-2022-ஆம் ஆண்டிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு 12 ஆயிரத்து 525 கிராம ஊராட்சிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2024-2025-ஆம் ஆண்டிலும், இத்திட்டம், தேர்வு செய்யப்பட்ட 2,482 கிராம ஊராட்சிகளில், 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

**3) தேவைக்கேற்ற உற்பத்தியை எட்ட வேளாண் பயிர்களில் பரப்பு விரிவாக்கம்**

உணவுப்பொருள் உற்பத்தியில் தன்னிறைவு எவ்வளவு முக்கியம் என்பதை ரஷ்யா-உக்ரைன் போர் நமக்கு உணர்த்தியுள்ளது. தேவைக்கேற்ற உற்பத்தியினை எட்டினால் மட்டுமே, தன்னிறைவு பெற முடியும். தமிழ்நாட்டின், நெல் தேவை ஓரளவிற்கு நிறைவு செய்யப்பட்டாலும், பயறு வகைகள், எண்ணெய்வித்துகளுக்கான தேவை நிறைவு செய்யப்படாமலேயே உள்ளது. தமிழ்நாட்டில்

ஆண்டொன்றிற்கு சுமார் 18 இலட்சத்து 45 ஆயிரம் மெட்ரிக் டன் உணவு எண்ணெய் தேவைப்படுகிறது. தற்பொழுது சாகுபடி செய்யப்படும் எண்ணெய்வித்துப் பயிர்களிலிருந்து 4 இலட்சத்து 85 ஆயிரம் மெட்ரிக் டன் தாவர எண்ணெய் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, இப்பயிர்களில் சிறப்புக் கவனம் செலுத்தி பரப்பு விரிவாக்கம் செய்து உற்பத்தி அதிகரிக்கப்படும்.

i) **பயறு பெருக்குத் திட்டம்**- உணவுப் பாதுகாப்பையும் ஊட்டச்சத்தையும் நோக்கமாகக் கொண்ட நிலையான உணவு உற்பத்தியின் ஒரு பகுதியாக பயறுவகைகளின் உற்பத்தி உள்ளது. அனைத்துப் பயறுவகைகளின் உற்பத்தியில் தன்னிறைவு பெறும் நோக்கத்தில், **2024-2025-ஆம் ஆண்டில் பயறு பெருக்குத் திட்டம் 4 இலட்சத்து 75 ஆயிரம் ஏக்கர் பரப்பில், 40 கோடியே 27 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.**

ii) **துவரை சாகுபடிப் பரப்பு விரிவாக்க இயக்கம்**- தமிழ்நாட்டில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் முக்கியப் பயறுவகையான துவரையின் பரப்பு தொடர்ச்சியாகக் குறைந்து, தற்போது ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மட்டுமே பயிரிடப்பட்டு வருகிறது. எனவே, துவரை சாகுபடிப் பரப்பு குறைந்துவரும் மாவட்டங்களில், இப்பயிரின் பரப்பு அதிகரிக்கப்பட்டு, **2024-2025-ஆம் ஆண்டில் 50,000 ஏக்கர் பரப்பில், துவரையைத் தனிப் பயிராகவோ, வரப்புப் பயிராகவோ அல்லது ஊடுபயிராகவோ பயிரிட, 17 கோடியே 50 இலட்சம் ரூபாய் மாநில அரசின் நிதி ஒதுக்கப்படும்.**

**iii) உணவு எண்ணெய் உற்பத்தி உயர்த்தும் திட்டம்**: நாம் அன்றாடம் உண்ணும் உணவில் எண்ணெய் முக்கிய அங்கம் வகிக்கிறது. விவசாயிகளுக்கு அதிக இலாபம் ஈட்டித்தரக்கூடிய எண்ணெய்வித்துப் பயிர்களான நிலக்கடலை, எள், சூரியகாந்தி, சோயாமொச்சை, ஆமணக்கு ஆகிய பயிர்களின் சாகுபடியைப் பரவலாக்கம் செய்ய, தொகுப்பு செயல்விளக்கத்திடல் அமைத்திடவும், நெல் தரிசில் எண்ணெய்வித்துப் பயிர்கள் சாகுபடி செய்வதை ஊக்குவித்திடவும், **2024-2025-ஆம் ஆண்டில் 45 கோடி ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.**

**iv) எள் சாகுபடிப் பரப்பு விரிவாக்கம்**: 2023-2024-ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, முக்கிய எண்ணெய் வித்துப் பயிர்கள் அதிகம் விளையும் மாவட்டங்கள் எண்ணெய்வித்து மண்டலமாக அறிவிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து, 2024-2025-ஆம் ஆண்டில், எள் சாகுபடிப் பரப்பு, மகசூலை அதிகரித்திட, சுமார் 25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிற்குத் தேவையான இடுபொருட்கள், அறுவடை செலவினம் ஆகியவற்றிற்கு மானியம் வழங்க, 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**v) சூரியகாந்தி சாகுபடிப் பரப்பு விரிவாக்கம்**: 2024-2025-ஆம் ஆண்டில், சூரியகாந்திப் பயிரின் சாகுபடிப் பரப்பினை 12 ஆயிரத்து 500 ஏக்கர் அதிகரித்திட **2 கோடி ரூபாய்** நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

vi) **ஆமணக்கு சாகுபடிப் பரப்பு விரிவாக்கம்**: அதிக விளைச்சல் தரும் வீரிய ஒட்டு இரக ஆமணக்கு சாகுபடியை 1,500 ஏக்கர் பரப்பளவில் ஊக்குவித்திட, 2024-2025-ஆம் ஆண்டில் 18 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**முக்கிய பயறுவகைகள், எண்ணெய்வித்துகளில் பரப்பு விரிவாக்கம் செய்யும் திட்டத்திற்கென மொத்தம் 108 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**4) பயிர் உற்பத்தித்திறன் உயர்த்துதல் ஊக்குவிப்புத் திட்டம்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மூன்று தொலைநோக்குத் திட்டங்களில், உணவு தானியப் பயிர்கள், தென்னை, கரும்பு, பருத்தி, சூரியகாந்தி உள்ளிட்ட பயிர்களில் தேசிய அளவில் முதல் மூன்று இடங்களில் தமிழ்நாடு இடம் பெற்றிட வழிவகை செய்யப்படும் என்பதும் ஒன்றாகும். குறைந்து வரும் சாகுபடிப் பரப்பில், வேண்டிய அளவு உற்பத்தி செய்யவேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம். எனவே, சாகுபடியில் தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்து உற்பத்தித்திறனை அதிகரிக்க சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

i) வேளாண் உற்பத்திக்கு அடிப்படைத் தேவையான தரமான விதைகளைப் பயன்படுத்துவதால் 15 சதவீதம் வரை மகசூலை அதிகப்படுத்தலாம். விவசாயிகள் தங்களுக்குத் தேவையான தரமான விதைகளைத் தாங்களே உற்பத்தி செய்து, உயர் விளைச்சல் பெற வேண்டும் என்ற நோக்கத்தில், விதைக் கிராமத் திட்டத்தில், 12 ஆயிரத்து 510 மெட்ரிக் டன் நெல், 260 மெட்ரிக் டன் சிறு தானியங்கள், 940 மெட்ரிக் டன்

பயறு வகைகள், இரண்டாயிரத்து 100 மெட்ரிக் டன் எண்ணெய்வித்துகள் என மொத்தம் 15 **ஆயிரத்து 810 மெட்ரிக் டன் விதைகள் 50 முதல் 60 சதவீத மானிய விலையில் விநியோகம் செய்யப்படும். இதற்கென, 2024-2025-ஆம் ஆண்டில் 35 கோடி ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

ii) பிற மாநில வேளாண் பல்கலைக்கழகங்களால் வெளியிடப்பட்டு தமிழ்நாட்டிற்கு அறிவிக்கை செய்யப்பட்ட பத்தாண்டுக்குட்பட்ட உயர் விளைச்சல் தரக்கூடிய நெல், சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துகளின் வல்லுநர் விதைகள், ஆதார நிலை, சான்று விதைகள் ஆகியவை தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமையின் வாயிலாகக் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

iii) நிலக்கடலை போன்ற வேளாண் பயிர்களில் ஜிப்சம் இடுதலை ஊக்குவித்து ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம் மூலம் உற்பத்தித்திறனையும், தரத்தினையும் அதிகரிக்க, 50,000 ஏக்கர் பரப்பிற்கு ஜிப்சம் வழங்க, ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். இதனால் 50,000 விவசாயிகள் பயன்பெறுவர்.

iv) தமிழ்நாட்டில் தொடர்ந்து நெல் சாகுபடி செய்யப்படும் நிலங்களில் ஏற்படும் ஊட்டச்சத்துக் குறைபாட்டை நிவர்த்தி செய்து, மண்ணின் வளத்தை மேம்படுத்திடவும், மகசூலைப் பெருக்கிடவும் நெற்பயிருக்கு துத்தநாக சல்பேட், ஜிப்சம்

உரங்கள், மொத்தம் 4 இலட்சம் ஏக்கர் பரப்பிற்கு, 9 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் விநியோகிக்கப்படும்.

v) நெற்பயிரில் நுண்ணூட்ட உரக் கலவை பயன்பாட்டை ஊக்குவிக்கும் திட்டமானது 2 இலட்சம் ஏக்கர் பரப்பில், 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**முக்கிய வேளாண் பயிர்களின் உற்பத்தித்திறனை உயர்த்துதலை ஊக்குவிக்கும் திட்டத்திற்கென, மொத்தம் 48 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**5) "ஒரு கிராமம் ஒரு பயிர்" செயல்விளக்கம்**

நாட்டின் உண்மையான முன்னேற்றம், கிராமங்களின் வளர்ச்சியில் உள்ளது என்ற காந்திய சிந்தனையில், கிராமங்களில் மறுமலர்ச்சி ஏற்படுத்திட "**ஒரு கிராமம் ஒரு பயிர்" என்ற புதிய திட்டம் 15 ஆயிரத்து 280 வருவாய் கிராமங்களில் செயல்படுத்தப்படும்.**

இத்திட்டத்தில், ஒரு கிராமத்திற்கு ஒரு பயிர் என்று ஐந்து முதல் பத்து ஏக்கர் பரப்பில், நெல், சோளம், மக்காச்சோளம், கம்பு, குதிரைவாலி, கேழ்வரகு, துவரை, உளுந்து, பச்சைப்பயறு, நிலக்கடலை, எள், சூரியகாந்தி, பருத்தி, கரும்பு போன்ற முக்கியப் பயிர்களுக்கான நிலம் தயாரிப்பு, உயர் விளைச்சல் இரகங்களைப் பயன்படுத்துதல், விதை நேர்த்தி, விதைப்பு, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை உட்பட்ட அனைத்துத் தொழில்நுட்பங்களையும் கடைப்பிடிக்க வைத்து, செயல் விளக்கங்கள் மேற்கொண்டு அதன் வாயிலாக விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

மேலும், **நன்மை செய்யும் பூச்சிகளைத் தெரிந்து கொள்ளவும், தீமை செய்யும் பூச்சிகளைத் தெரிந்து கொல்லவும்** ஏதுவாக "**நிரந்தரப் பூச்சிக் கண்காணிப்புத் திடல்கள்**" வயல்களில் அமைக்கப்பட்டு, உரிய பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் விவசாயிகளுக்குப் பரிந்துரைக்கப்படும்.

**6) தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்**

"**கருங்கால் வரகே இருங்கதிர்த் தினையே**
**சிறுகொடிக் கொள்ளே பொறிகிளர் அவரையோடு**
**இந்நான் கல்லது உணவும் இல்லை**" – என்ற புறநானூற்று கூற்றின்படி, நமது உணவில் சிறுதானியத்தின் பங்கினைக் கருத்தில் கொண்டும், சிறுதானியத்தில் உள்ள ஊட்டச்சத்துகளின் முக்கியத்துவம் உலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காகவும், **2023-ஆம் ஆண்டானது சர்வதேச சிறுதானிய ஆண்டாகக்** கொண்டாடப்பட்டது.

ஊட்டச்சத்து மிகுந்த சோளம், கம்பு, கேழ்வரகு போன்ற சிறுதானியங்கள் வரகு, பனிவரகு, குதிரைவாலி, சாமை, தினை போன்ற குறுதானியங்கள் ஆகியவற்றின் சாகுபடிப் பரப்பு, உற்பத்தி, உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கத்தில் தமிழ்நாடு அரசால், 25 மாவட்டங்களைக் கொண்டு ஏற்கனவே இரண்டு சிறுதானிய மண்டலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 2023-2024-ஆம் ஆண்டு முதல் 2027-2028-ஆம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் இரண்டு மண்டலங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **இத்திட்டம் 2024-2025-ஆம் ஆண்டிலும்**

**65 கோடியே 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

**7) மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம்**

வேளாண்மையை உயர்வளர்ச்சிப் பாதையில் கொண்டுசெல்ல முனைப்புடன் செயல்படும் தமிழ்நாடு அரசு, விவசாயிகளின் தேவைகளை பல்வேறு கருத்துக் கேட்புக் கூட்டங்கள் மூலம் கேட்டு, அவற்றைக் கூடிய மட்டும் செயல்படுத்துவதற்கான உகந்த திட்டங்களை உருவாக்குவதோடு வேளாண்மையில் ஒட்டு மொத்த வளர்ச்சியை அதிகரிக்கக் கூடிய உத்திகளைச் செயல்படுத்தும் விதமாக "**மாநில வேளாண் வளர்ச்சி திட்டம்**" 2022-2023-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. இதில்,

i) **மாநில அளவில் சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணைய்வித்துகள், கரும்பு பயிர்களில் அதிக உற்பத்தியைப் பெறும் முதல் மூன்று விவசாயிகளுக்கு** முதல் பரிசாக 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய், இரண்டாம் பரிசாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய், மூன்றாம் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய் என 33 பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2024-2025-ஆம் ஆண்டிலும் இத்திட்டத்திற்காக 55 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

ii) அதிக நீர் தேவைப்படும் நெற்பயிருக்கு மாற்றாக, குறைந்த நீர்த் தேவையுடைய மாற்றுப்பயிர்களான சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துப் பயிர்களை ஊக்குவிக்கும் வகையில், 2024-2025-ஆம்

ஆண்டில், ஒரு இலட்சம் ஏக்கர் பரப்பளவில் மாற்றுப் பயிர் சாகுபடித் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்குத் தேவையான விதை, உயிர் உரங்கள், உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள், நுண்ணூட்ட உரங்கள், இலைவழி உரத்திற்கு தெளிப்பு மானியம், அறுவடை மானியம் ஆகியவற்றுக்கு 12 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

iii) **பட்டதாரி இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக்கும் விதமாக** 2024-2025-ஆம் ஆண்டில், 100 இளைஞர்களுக்கு வங்கிக்கடன் உதவியுடன் கூடிய ஏதாவது ஒரு வேளாண் சார்ந்த தொழில் தொடங்குவதற்காகப் பட்டதாரி ஒருவருக்கு அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபாய் மானியம் வழங்கிட, ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 8) கிராம வேளாண் முன்னேற்றக் குழு

பயிர் சாகுபடியில் அதிக உற்பத்தியும் அதிக வருமானமும் பெற, பருவத்தே பயிர் செய்து உயரிய தொழில்நுட்பங்களைப் புகுத்தி, சந்தைத் திறனில் திறம்பட்டு நீடித்த வளர்ச்சி அடைய உரிய ஆலோசனைகளைக் குறித்த நேரத்தில் உழவர்களுக்கு வழங்க, கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளில், கிராம முன்னேற்றக் குழுக்கள் அமைக்கப்பட்டு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. 2024-2025-ஆம் ஆண்டில், 2,482 கிராம ஊராட்சிகளில் கிராம முன்னேற்றக்

குழுக்கள் உருவாக்கப்பட்டு, 2 கோடியே 48 இலட்சம் ரூபாய் அட்மா (ATMA) திட்ட நிதி ஒதுக்கீட்டில் பயிற்சிகள் வழங்கப்படும்.

**9) சிறந்த உயிர்ம விவசாயிக்கான நம்மாழ்வார் விருது**

2023-2024-ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு அரசால் உயிர்ம வேளாண்மையில் ஈடுபடும் சிறந்த விவசாயிகளுக்குச் சிறந்த உயிர்ம விவசாயிக்கான "**நம்மாழ்வார் விருது**" வழங்கப்பட்டு வருகிறது. 2024-2025-ஆம் ஆண்டிலும் உயிர்ம விவசாயிகளைக் கௌரவிக்கும் வகையில், பாராட்டுப் பத்திரத்துடன் பணப்பரிசும் முதல் மூன்று விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதற்கென 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**10) ஆதி திராவிடர், பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த குறு, சிறு விவசாயிகளுக்கு 20 சதவீத கூடுதல் மானியம்**

"**யாரும் விடுபடாமல், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி**" எனும் சமூக நீதிக் கோட்பாடு உடையது இந்த அரசு. இதற்காகத்தான் ஆதி திராவிட, பழங்குடியினத்தைச் சேர்ந்த சிறு, குறு விவசாயிகள் பயனடையும் வகையில், துறையின் மூலம் செயல்படுத்தப்படும் உயர் மதிப்புள்ள திட்டங்களுக்கு வழங்கப்படும் மானியத்துடன், கூடுதலாக 20 சதவீத மானியத் தொகை 2022-2023-ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. **2024-2025-ஆம் ஆண்டிலும் இதற்கென 18 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**11) பலன்தரும் பருத்தி சாகுபடி**

வணிகப் பயிரான பருத்தியில் அதிகத் தேவையுள்ள நீண்ட, மிக நீண்ட இழை இரகங்களை இந்தியாவின் 'நூல் கிண்ணம்' என்றழைக்கப்படும் தமிழ்நாட்டில், அதிக அளவில் உற்பத்தி செய்து நூற்பாலைகளுக்கு உரிய நேரத்தில் வழங்கி, அதன் மூலம் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்திட "பருத்தி சாகுபடி இயக்கத்தை" 29 கோடியே 72 இலட்சம் ரூபாய் நிதியில் செயல்படுத்தியதன் காரணமாக, 2020-2021-இல் இரண்டு இலட்சத்து 76 ஆயிரம் ஏக்கராக இருந்த பருத்தி சாகுபடிப் பரப்பு, 2022-2023-ஆம் ஆண்டில் நான்கு இலட்சத்து 27 ஆயிரம் ஏக்கராக உயர்ந்தது. உற்பத்தியும் 2 இலட்சத்து 42 ஆயிரம் பேல்களிலிருந்து 3 இலட்சத்து 19 ஆயிரம் பேல்களாக உயர்ந்துள்ளது. **2024-2025-ஆம் ஆண்டில், பலன் தரும் பருத்தி சாகுபடித் திட்டம் 14 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். இதனால், பருத்தி உற்பத்தி தமிழ்நாட்டில் 5 இலட்சத்து 50 ஆயிரம் பேல்களாக உயரும்.**

**12) பயிர்க்காப்பீடு**

இயற்கைச் சீற்றங்களால் விவசாயிகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பிலிருந்து அவர்கள் மீண்டு வரும் வகையில் **பயிர்க் காப்பீட்டுத் திட்டம்** செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில், 2023-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17, 18-ஆம் தேதிகளில் பெய்த கனமழையால் அதிகம் பாதிப்படைந்த தூத்துக்குடி மாவட்டத்தில், மழையால் ஏற்பட்ட **பயிர்**

**சேதத்திற்காக 14 கோடியே 55 இலட்சம் ரூபாய், 9,988 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக உடனடியாக வழங்கப்பட்டது.**

**2024-2025-ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த 1,775 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**13) வேளாண் மேம்பாட்டிற்கான பயிற்சிகள்**

பயிற்சி கொடுப்பதை மனிதவள மேம்பாட்டுக்கான முதலீடாகக் கருதவேண்டும். பயிற்சியின் மூலம் பணித்திறனையும், தொழில்நுட்ப அறிவினையும் மேம்படுத்தி, வேளாண் மேம்பாட்டினை எய்தும் வண்ணம், 15,000 விவசாயிகளுக்கும், 500 படித்த இளைஞர்களுக்கும், 1,600 அலுவலர்களுக்கும், 500 பணியாளர்களுக்கும் பல்வேறு பயிற்சிகள் 50 இலட்சம் ரூபாய் நிதியில் வழங்கப்படும்.

## சர்க்கரைத் துறை

சர்க்கரைத் தொழில் விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சியிலும் கிராமப்புர மேம்பாட்டிலும் பெரும்பங்கு வகிக்கும் முக்கிய வேளாண் சார்ந்த தொழிலாகும். தமிழ்நாட்டில் 13 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 15 தனியார் என மொத்தமாக 30 சர்க்கரை ஆலைகள் இயக்கத்தில் உள்ளன.

கரும்பு விவசாயிகளின் நலனுக்காகவும், கரும்பு பதிவுப் பரப்பு, உற்பத்தியினை அதிகரிக்கவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேலும் மேம்படுத்திடவும், 2024-2025-ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

**14) சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு வழங்கிய விவசாயிகளுக்குச் சிறப்பு ஊக்கத் தொகை**

வேளாண்மை நிதிநிலை அறிக்கை தொடர்பாக நடத்தப்பட்ட கருத்துக் கேட்புக் கூட்டங்களின்போது, அனைத்துக் கரும்பு விவசாயிகளாலும் தொடர்ந்து கேட்கப்பட்ட கோரிக்கையினை ஏற்று, கரும்பு சாகுபடிப்பரப்பு, உற்பத்தியை அதிகரிக்கவும், கரும்பு விவசாயிகள் கூடுதல் வருவாய் பெறும்வகையிலும், 2023-2024-அரவைப் பருவத்திற்கு சர்க்கரை ஆலைகளுக்குப் பதிவு செய்து கரும்பு வழங்கிய தகுதியுள்ள விவசாயிகளுக்கு, ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள நியாயமான மற்றும் ஆதாய விலைக்கு மேல் ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த 195 ரூபாய் சிறப்பு ஊக்கத்தொகையினை விட, **முன் எப்போதும் இல்லாத அளவில் டன் ஒன்றுக்கு 215 ரூபாய் சிறப்பு ஊக்கத்தொகையாக உயர்த்தி வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம், சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் கரும்பு விவசாயிகள் பயன்பெறுவர். இதற்கென, 250 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**15) கரும்பு சாகுபடி மேம்பாட்டுத்திட்டம்**

கரும்பு விவசாயிகளின் நலனுக்காகவும், கரும்பு சாகுபடி செலவைக் குறைத்து, சாகுபடிப் பரப்பை அதிகரிக்கவும், சர்க்கரைக் கட்டுமானத்தை உயர்த்தவும், பூச்சி, நோய் தாக்குதலுக்கு எதிர்ப்புடைய அதிக சர்க்கரைக் கட்டுமானம் தரக்கூடிய புதிய கரும்பு இரகங்களைக் கரும்பு விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கவும் ஒன்றிய,

**மாநில அரசு நிதியிலிருந்து 7 கோடியே 92 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**16) சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்துதல்**

கள்ளக்குறிச்சி-1, செங்கல்ராயன், செய்யாறு, திருப்பத்தூர் ஆகிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் நவீன கரும்பு எடைமேடைகள், தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையில் சுழல் கவிழ்ப்பான், 10 கூட்டுறவு, 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் சிமெண்ட் கான்கிரீட் கரும்புத்தளங்கள், 4 கூட்டுறவு, ஒரு பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் கழிவுமண் மக்கவைக்கும் களங்கள் ஆகியவற்றை அமைக்க, ஒன்றிய, மாநில அரசு நிதியிலிருந்து, 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**17) சர்க்கரை ஆலைகளின் செயல்திறன் உயர்த்தும் நடவடிக்கைகள்**

பெரம்பலூர், செய்யாறு, வேலூர், சேலம், மதுராந்தகம், சுப்பிரமணிய சிவா ஆகிய சர்க்கரை ஆலைகளில், கரும்பு அரவைப் பகுதி இயந்திரங்களை ஒருங்கிணைத்து, **3 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் ஆலை அரவைப் பகுதி தானியங்கிமயமாக்கப்படும்.**

செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 18 மெகாவாட் பவர் டர்பைனுக்குத் தேவையான புதிய டர்பைன் ரோட்டர் அசெம்பிளி, **6 கோடியே 31 இலட்சம் ரூபாய்** மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு ஆலையில் அரவை நிறுத்தம் ஏற்படுவது தவிர்க்கப்படும்.

செங்கல்ராயன், வேலூர், செய்யாறு, அறிஞர் அண்ணா, பெரம்பலூர், தருமபுரி, எம்.ஆர்.கே ஆகிய சர்க்கரை ஆலைகளில் இயங்கிவரும் இணை மின் நிலையங்களில், நீர் சுத்திகரிப்பு நிலைய அயனி மற்றும் எதிர் அயனி பரிமாற்றி, ஒரு கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும். இதனால் ஆலையின் நீரின் தரம் மேம்படுத்தப்பட்டு, பவர் டர்பைனின் ஆயுட்காலம் நீட்டிக்கப்படும். எம்.ஆர்.கே, செய்யாறு ஆகிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு அரவை இயந்திரத்தின் மின் மோட்டாரைக் கட்டுப்படுத்தும் கருவி, ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதனால் மின் மோட்டாரைக் கட்டுப்படுத்தும் கருவியின் பழுது காரணமாக ஏற்படும் அரவை நேர இழப்பு தவிர்க்கப்படும்.

**சர்க்கரை ஆலைகளின் மேம்பாட்டிற்காக, மொத்தம் 12 கோடியே 40 இலட்சம் ரூபாய் ஆலை நிதியிலிருந்து செலவிடப்படும்.**

## தோட்டக்கலை – மலைப் பயிர்கள் துறை

**"கதிர்படு வயலின் உள்ள கடிகமழ் பொழிலின் உள்ள**
**முதிர்பல மரத்தின் உள்ள முதிரைகள் புறவின் உள்ள**
**பதிபடு கொடியின் உள்ள படிவளர் குழியின் உள்ள**
**மதுவள மலரிற் கொள்ளும் வண்டெடன மள்ளர் கொள்வார்"**

என்ற கம்பராமாயணப் பாடல் வாயிலாக, வயல்களில் நெல்லோடு, சோலைகளில் மலர் சாகுபடியும், தோட்டங்களில் பழச்சாகுபடியும், மானாவாரி நிலங்களில் புன்செய் பயிரும்,

பதியமிடப்பட்ட கொடிப்பயிர்களும், படர்ந்து விளையக் கூடிய காய்கறிப் பயிர்களும் சாகுபடி செய்து பண்டைய உழவர்கள் பயன் பெற்றனர் என்பது அறியப்படுகிறது. அதிக வருமானம் தரவல்ல தோட்டக்கலைப் பயிர்களை ஊக்குவிக்க பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

## 18) வறண்ட நிலங்களில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாடு

குறைந்த அளவு நீரினைப் பயன்படுத்தி வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய ஊட்டச்சத்து நிறைந்த அத்தி, கொடுக்காப்புளி, பெருநெல்லி, விளாம்பழம், இலந்தை, டிராகன் பழம் போன்ற பயிர்களைப் பயிரிடுதல், நீர் சேமிப்பு ஆதாரம் ஏற்படுத்துதல், வயல்களில் நீர் ஆவியாவதைக் குறைத்திட நெகிழி நிலப்போர்வை வழங்குதல் ஆகியவற்றிற்கு மானியம் வழங்குவதற்காக, **3 கோடியே 64 இலட்சம் ரூபாய்** ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், பல்லாண்டுப் பயிர்களுக்குள் ஊடுபயிர் சாகுபடி செய்வதனை ஊக்குவித்து விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைத்திடவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்படும்.

## 19) தோட்டக்கலைப் பயிர் சாகுபடியினை ஊக்குவித்தல்

தோட்டக்கலைப் பயிர்களை, உகந்த காலநிலையில் சாகுபடி செய்யும் பொழுது தரமான விளைபொருட்கள் விளைந்து அவற்றின் சந்தை மதிப்பும் கூடுகிறது. உதாரணமாக, கொடைக்கானல் மலைப்பூண்டு, இராமநாதபுரம் முண்டு மிளகாய், சாத்தூர் சம்பா மிளகாய், கொல்லிமலை மிளகு, கன்னியாகுமரி இலவங்கப்பட்டை, தேனி ஏலக்காய்,

கோயம்புத்தூர் ஜாதிக்காய், கோகோ போன்றவை நுகர்வோர்களால் அதிக அளவில் விரும்பப்படுகின்றன. விவசாயிகளின் கோரிக்கையின்படி, புவிசார் குறியீடு பெறப்பட்ட முண்டு மிளகாய் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குச் சாகுபடி மானியம் பின்னேற்பு மானியமாக வழங்கப்படும்.

மேற்கண்ட பகுதி சார்ந்த தோட்டக்கலைப் பயிர்களுக்கான சாகுபடியினை அதிகரித்திடும் விதமாக, 2 **கோடியே 70 இலட்சம் ரூபாய்** ஒதுக்கீட்டில் தரமான நடவுச்செடிகள் மானியத்தில் வழங்கப்படும்.

**20) ஒருங்கிணைந்த தென்னை வளர்ச்சித் திட்டம்**

"**மல்லல் அம் தெங்கு இள நீர் பெய் பண்டியும்**
**மெல் இலைப் பண்டியும் கமுகின் மேதகு**
**பல் பழுக்காய்க் குலை பெய்த பண்டியும்**
**ஒல்கு தீம் பண்டம் பெய்து ஒழுகும் பண்டியும்**"

என,

தேங்காய், இளநீர், வெற்றிலை, பாக்கு, இனிய பண்டங்கள் ஏற்றிய வண்டிகள் சென்றன என்று சீவக சிந்தாமணி செப்புவதன் மூலமும், "**தெங்கின் இளநீர் உதிர்க்கும் வளமிகு நன்னாடு**" என்று புறநானூறு கூறுவதன் மூலமும் தென்னையின் சிறப்பினை நாம் உணரலாம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தென்னை சாகுபடியை, 10,000 ஏக்கர் பரப்பில் புதிதாக ஊடுபயிர் சாகுபடி மேற்கொள்ள, **ஏழு இலட்சம் தரமான தென்னை நாற்றுக்கள், 4 கோடியே 80 இலட்சம் ரூபாய் நிதியில் வழங்கப்படும்.** தென்னை பயிரிட்டு, ஐந்து வருடம் வரையிலான

தென்னந்தோப்புகளில் வாழையும், நன்கு வளர்ந்த தென்னந்தோப்புகளில் ஜாதிக்காயும் ஊடுபயிராகப் பயிரிட, **5 கோடியே 70 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.** தென்னை நாற்றங்கால்கள் அமைத்தல், நாற்றங்கால் மேம்பாடு, பழைய தென்னந்தோப்புகளைப் புதுப்பித்தல், தென்னங்கழிவுகளை மக்கச் செய்து இயற்கை உரங்களாக மாற்ற இயற்கை உரம் தயாரிக்கும் கூடம் ஏற்படுத்துதல் ஆகியவற்றிற்கு மானியம் வழங்குவதோடு தென்னை சார்ந்த தொழில்நுட்பங்களை விவசாயிகள் அறிவதற்கு ஏதுவாக, விவசாய நிலங்களிலும், தென்னை நாற்றங்கால் மையங்களிலும், தென்னை செயல் விளக்கத் திடல்கள் அமைத்து உற்பத்தியினை அதிகரித்திட வழிவகை செய்யப்படும். இதற்கென, **12 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

தென்னை சாகுபடிக்குத் தேவையான இடுபொருட்களை, உரிய நேரத்தில் குறித்த அளவில் அளிப்பதால் தென்னையில் உற்பத்தித்திறன் அதிகரிக்கும் என்பதை எடுத்துக்காட்டும் வகையில் 25,000 ஏக்கர் பரப்பில் செயல்விளக்கத் திடல்கள் அமைக்கப்படும். இதற்கென 12 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

தென்னையில் கேரளா வேர் வாடல் நோயினையும், வெள்ளை ஈக்களையும் கட்டுப்படுத்தத் தேவையான ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை உத்திகளை, விவசாயிகளுக்கு வழங்கிட, ஒரு கோடியே 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

உரிய நேரத்தில் தேங்காயினை அறுவடை செய்தல், சூரிய சக்தி மின் உலர்த்திக் கூடத்தில் உலர்த்துதல், எண்ணெய் தயாரித்தல் முதலியன ஐந்து தென்னை நாற்றுப் பண்ணைகளில் செயல்விளக்கமாக நிறுவப்பட்டு, விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

**21) நுண்ணீர்ப் பாசனத் திட்டம்**

பாசன நீரினைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, பயிர் சாகுபடிப் பரப்பை அதிகப்படுத்தவும், பயிரின் உற்பத்தி, உற்பத்தித்திறனை மேம்படுத்தவும், நுண்ணீர்ப் பாசனத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் 6 இலட்சத்து 91 ஆயிரம் ஏக்கர் பரப்பில் 2,114 கோடியே 32 இலட்சம் ரூபாய் நிதியில், 2 இலட்சத்து 82 ஆயிரம் விவசாயிகள் பயனடையும் வகையில் நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

2024-2025-ஆம் ஆண்டில், 2 இலட்சத்து 22 ஆயிரம் ஏக்கர் பரப்பில், ஒரு இலட்சம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் 232 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒன்றிய நிதியுடன், 540 கோடியே 73 இலட்சம் ரூபாய் மாநில நிதியை ஒருங்கிணைத்து **773 கோடியே 23 இலட்சம் ரூபாய்** நிதி ஒதுக்கீட்டில் நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவப்படும். இத்திட்டத்தில் நிலத்தடி நீர் அதிகம் உறிஞ்சப்பட்டு, நிலத்தடி நீர் அதிகமாகக் குறைந்து வரும் குறு வட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

**22) அரசு தோட்டக்கலைப் பண்ணைகள், விவசாயிகளின் நிலங்களில் தானியங்கி மின்னணு பாசன வசதிகள் ஏற்படுத்துதல்**

விவசாயப் பணிகளுக்கு வேலை ஆட்கள் கிடைப்பதில் மிகுந்த சிரமம் உள்ளதால், தானியங்கி முறை மூலம் நுண்ணீர்ப் பாசன அமைப்புகளை இயக்கி பாசன நீரை பயிரின் தேவைக்கு ஏற்ப துல்லியமாக வேர்ப்பகுதியில் நேரடியாக அளிப்பதை ஊக்குவிக்கும் வகையில், தானியங்கி அமைப்புகளை நிறுவுவதற்கு, மானியம் வழங்கப்படும். இதற்கென, 2024-2025-ஆம் ஆண்டில் **12 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

மேலும், அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் பாசன நீர் பயன்பாட்டுத் திறனை அதிகப்படுத்த, முதற்கட்டமாக 10 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில், 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தானியங்கி நீர்ப்பாசன அமைப்புகள் நிறுவப்பட்டு, அவை மாதிரிப் பண்ணைகளாகவும் செயல்படும்.

**23) தோட்டக்கலைப் பண்ணை இயந்திரக் கண்காட்சி**

தோட்டக்கலைப் பயிர்களில் இயந்திரங்களின் பயன்பாடு மிகவும் இன்றியமையாததாக உள்ள நிலையில், நிலம் சீர்செய்தல் முதல் அறுவடை பின்செய் மேலாண்மை வரையில் பயன்படுத்தப்படும் கருவிகள், இயந்திரங்கள் ஆகியவை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திட, கண்காட்சி ஒன்று நடத்தப்படும். இதனால், விவசாயிகள், தோட்டக்கலை தொழில்முனைவோர்கள், அலுவலர்கள் ஆகியோர்

பயனடைவர். இக்கண்காட்சி 10 கோடி ரூபாய் செலவில் ஒன்றிய, மாநில நிதியில் நடத்தப்படும்.

### 24) முக்கனி மேம்பாட்டுக்கான சிறப்புத் திட்டம்

**“முந்துமுக் கனியின் நானா முதிரையின் முழுத்த நெய்யின் செந்தயிர்க் கண்டங் கண்டம் இடையிடை செறிந்த சோற்றின்”**

என்று கம்பராமாயணத்தில் விருந்தோம்பலை எடுத்துக்கூறுமிடத்து, மா, பலா, வாழை என்னும் முக்கனிகள், பலவகைப்பட்ட பருப்புகள், நெய், செந்நிற தயிர்க் கட்டிகளுடன் பரிமாறப்பட்ட அமுதம் போன்ற உணவினை உறவினர்களுடன் சேர்ந்து மக்கள் உண்கின்றனர் என்கிறார் கம்பர்.

இக்கனிகள் அவற்றின் சுவைக்காகவும், ஊட்டச்சத்துகளுக்காகவும் எல்லோராலும் விரும்பப்படுவதால், அவற்றின் பரப்பினையும் உற்பத்தியினையும் அதிகரித்து, அனைவருக்கும் கிடைக்கும் வகையில் மா, பலா, வாழை பயிரிடும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

**i) மா:**

**“கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்**
**பழன வாளை கதூஉ மூரன்”**

என, வயல் அருகில் உள்ள மா மரத்திலிருந்து, பழுத்துத் தானாக விழுகின்ற இனிய பழங்களை வாளை மீன்கள் கவ்வி உண்ணும் வளமிக்க நாட்டினைப் பற்றிக் குறுந்தொகையும்,

**"அடுமகள் முகந்த அளவா வெண்ணெல்**

**தொடிமாண் உலக்கைப் பருஉக்குற்று அரிசி**

**காடி வெள்ளுலைக் கொளீஇ நீழல்**

**ஓங்குசினை மாவின் தீங்கனி நறும்புளி"**

என, அரிசியால் ஆக்கிய சோற்றை, புளித்த நீருள்ள உலையில் பெய்து, மிகுந்த நிழல் தரும் கிளைகளையுடைய மாமரத்தின் இனிய மாம்பழங்களைப் பிசைந்து செய்த மணமுள்ள புளிக்குழம்பும் இட்டு உண்டதாகக் கூறி, பண்டைய உணவில் மாம்பழம் புளிப்பு சுவையளிக்கப் பயன்படுத்தப்பட்டதைப் புறநானூறும் விவரிக்கின்றன.

முக்கனிகளில் முதற்கனியான 'மா' வில், தென்னாட்டு இரகங்களான பாதிரி, நீலம், பெங்களூரா, ருமானி, மல்கோவா, பங்கனப்பள்ளி போன்ற விருப்பத்திற்குரிய இரகங்களைக் கொண்டு 4,380 ஏக்கரிலும், ஏற்றுமதிக்கேற்ற இரகங்களான இமாம் பசந்த், இரத்தினகிரி அல்போன்ஸோ, சிந்து போன்ற இரகங்களைக் கொண்டு புதிதாக 250 ஏக்கரிலும் மாந்தோப்புகள் உருவாக்கப்படும். நன்னெறி வேளாண் நடைமுறை, உற்பத்தி முதல் விற்பனை வரை ஒவ்வொரு நிலையிலும் ஏற்றுமதிக்குரிய வகையில் விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படும்.

கவாத்து செய்வதன் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுவதோடு, 26 ஆயிரத்து 540 ஏக்கர் பரப்பிலான பழைய தோட்டங்களைப் புதுப்பித்து அதிக விளைச்சல் தரும் தோட்டங்களாக மாற்றிட விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படும்.

மேலும், மா பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு வளர்ச்சி ஊக்கிகள், உயிர் உரங்கள், உயிரி கட்டுப்பாட்டுக் காரணிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான செயல்விளக்கத்திடல்கள், 6,175 ஏக்கர் பரப்பிற்கு மானியத்தில் வழங்கப்படும்.

**2024-2025-ஆம் ஆண்டில் 'மா' விற்கான சிறப்புத்திட்டம், 27 கோடியே 48 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.**

ii) **வாழை**: உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழைக்கான தேவை அதிகரித்துள்ளதால் வாழை உற்பத்தியை அதிகரிக்க, 5,220 ஏக்கரில் வாழை பரப்பு விரிவாக்கம் செய்யப்படும். விவசாயிகளின் கோரிக்கைக்கு இணங்க, குலைகொண்ட வாழைகள் காற்றில் விழுந்து சேதமடைவதைத் தடுக்கும் வகையில் 3,700 ஏக்கரில் கழிகளைக் கொண்டு முட்டுக்கொடுத்தல் மேற்கொள்ள மானியம் வழங்கப்படும். சேதம், கறைகளற்ற தரமான வாழைத்தார்கள் உற்பத்தி செய்து அதிக விலை கிடைக்கப்பெறும் வகையில், வாழைத்தார் உறைகள் 4,440 ஏக்கருக்கு வழங்கப்படும். **2024-2025-ஆம் ஆண்டில் வாழைக்கான சிறப்புத்திட்டம், 12 கோடியே 73 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.**

iii) **பலா**: 2023-2024-ஆம் ஆண்டில், 1,850 ஏக்கர் பரப்பில் செயல்படுத்தப்பட்டதன் தொடர்ச்சியாக, 2024-2025-ஆம் ஆண்டிலும், பலாவில் உள்ளூர் இரகங்கள் 620 ஏக்கரிலும், புதிய இரகங்கள் 620 ஏக்கரிலும் பரப்பு விரிவாக்கம் செய்யவும், பலா

விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த உரம், பூச்சி மேலாண்மைக்கான இடுபொருட்கள், பயிற்சிகள் வழங்கவும், பலா பதப்படுத்தும் கூடங்கள் அமைக்கவும், ஒரு கோடியே 14 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**25) குளிர்மண்டலப் பழப்பயிர்களின் பழைய தோட்டங்களைப் புதுப்பித்தல்**

கொடைக்கானலில் பயிரிடப்பட்டுள்ள பேரிக்காய், பிளம்ஸ் போன்ற குளிர் மண்டல பழப்பயிர்களின் பழைய இரகங்களை, புதிய இரகங்களைக் கொண்டு ஒட்டுக்கட்டுதல் மூலம் புதுப்பித்து மரங்களின் மகசூலை அதிகரித்திட மானியம் வழங்கப்படும். இத்திட்டம், 370 ஏக்கர் பரப்பளவில், 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**26) புதிய அரசு தோட்டக்கலைப் பண்ணைகள், பூங்காக்கள் அமைத்தல்**

i) **முல்லைப் பூங்கா**: ஐவகைத் தமிழர் நிலத்திணைகளில் ஒன்றான காடும் காடு சார்ந்த இடத்தைச் சேர்ந்த முல்லை நிலத்தில் வாழ்ந்த தமிழ் மக்களின் வாழ்வியல், புவியியல் நிலைகளை எடுத்துக்காட்டும் விதமாக, முல்லைப் பூங்கா கன்னியாகுமரியில் உள்ள வேளிமலையில், 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

ii) **மருதம் பூங்கா**: வயலும் வயல் சார்ந்த இடத்தைச் சேர்ந்த மருத நில மக்களின் வாழ்வியலையும், மரங்களையும், செடிகளையும் எடுத்துக்காட்டும் வகையில் காவிரி ஆற்றின் படுகையில் வளம் செறிந்த வயல் வெளிகள் நிறைந்த தஞ்சாவூர்

மாவட்டத்தில் திருமலைச் சமுத்திரம் என்ற இடத்தில், 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் "மருதம் பூங்கா" அமைக்கப்படும்.

iii) **சூரியத் தோட்டம்**: தமிழ்நாட்டில் பிரபல சுற்றுலாத்தலமாக கன்னியாகுமரி விளங்குகிறது. கன்னியாகுமரியில் சூரிய உதயப்புள்ளிக்கும் மறைவுப் புள்ளிக்கும் இடையே ஒரு தோட்டம் அமைத்தால் அது பார்வையாளர்களை மிகவும் கவரும். இதனைக் கருத்தில் கொண்டு, கடற்கரை அருகில் **சூரியத் தோட்டம், 2 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.**

iv) **செம்பருத்தி நடவுச்செடிகள் உற்பத்தி மையம்**: செம்பருத்தி, உணவு, அழகு சாதனப் பொருட்கள், மருத்துவப் பொருட்கள் போன்றவை உற்பத்தி செய்யப் பயன்படுகிறது. மேலும், செம்பருத்திப் பூ இதழ்களிலிருந்து தயாரிக்கப்படும் தேநீர், இரத்த அழுத்தம், மன அழுத்தம், கொழுப்பு, உடல் எடை ஆகியவற்றைக் குறைக்க உதவுகிறது. இத்தகைய சிறப்புமிக்க செம்பருத்தியை பொதுமக்களிடம் கொண்டு செல்ல, செங்கல்பட்டு மாவட்டம் ஆத்தூரில், ஒரு கோடி ரூபாய் செலவில் செம்பருத்தி நடவுச்செடிகள் உற்பத்தி மையம் அமைக்கப்படும்.

v) **நடுவக்குறிச்சியில் புதிய அரசு தோட்டக்கலைப் பண்ணை**: இனத்தூய்மையான, தரமான நடவுச் செடிகளை உரிய நேரத்தில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு நியாயமான விலையில் வழங்கவும், விவசாயிகளுக்கு மாதிரி செயல் விளக்கப் பண்ணையாகச் செயல்படவும், தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம், நடுவக்குறிச்சி கிராமத்தில்

நான்கு ஏக்கர் நிலப்பரப்பில் புதிய அரசுத் தோட்டக்கலைப் பண்ணை, ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**vi) ஊட்டி ரோஜா பூங்காவில் புதிய ரோஜா இரகங்களை அறிமுகம் செய்தல்**

உதகையில் அரசு ரோஜா பூங்காவில் பெரிய, சிறிய வகை ரோஜாக்கள், கொடி ரோஜா போன்ற 4,201 வகைகளை உள்ளடக்கிய 32,000 ரோஜாச் செடிகள் உள்ளன. இந்த உலகப் புகழ்பெற்ற அரசு ரோஜா பூங்காவில் ஆண்டுக்கு சராசரியாக 10 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்து அனைத்து வகையான ரோஜாக்களையும் கண்டு மகிழ்கின்றனர். இப்பூங்காவின் ரோஜா தொகுப்பினைச் செறிவூட்டும் வகையில், முதற்கட்டமாக, 100 புதிய இரக ரோஜா வகைகள் நடவு செய்யப்பட்டு சுற்றுலாப் பயணிகளை மேலும் கவரும் வண்ணம் இப்பூங்கா மேம்படுத்தப்படுத்தப்படும்.

**27) மூலிகைப் பயிர் சாகுபடியை ஊக்குவித்தல்**

பாரம்பரிய மருத்துவத்தின் மகத்துவத்தை மக்கள் உணர்ந்துள்ளதால், மூலிகைப் பயிர்களின் பயன்பாடு தற்போது அதிகரித்துள்ள சூழ்நிலையில், மூலிகைப் பயிர் சாகுபடியை ஊக்குவிக்கவும், மூலிகை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உதவவும், கண்வலிக் கிழங்கு (செங்காந்தள்), சென்னா, நித்தியகல்யாணி, மருந்துக்கூர்க்கன் (Coleus) போன்ற மூலிகைப் பயிர்களை 1,680 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்வதற்கு, 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 28) ஒருங்கிணைந்த முந்திரி வளர்ச்சித் திட்டம்

தமிழ்நாட்டில், முந்திரி இரண்டு இலட்சத்து ஏழாயிரம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, ஆண்டிற்கு சுமார் 43,500 மெட்ரிக் டன் முந்திரிப் பருப்பு உற்பத்தியாகிறது. மேலும், 4 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு முந்திரி பதப்படுத்தும் வசதிகள் இருந்தும், அதற்கான மூலப்பொருளான முந்திரி 10 சதவீதம் மட்டுமே இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, முந்திரி சாகுபடிப் பரப்பை அதிகரித்து உற்பத்தியை உயர்த்திட, 2 கோடியே 36 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

மேலும், தரமான முந்திரியை விளைவிக்க இயற்கை இடுபொருட்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் 2,470 ஏக்கர் பரப்பளவில் செயல்விளக்கம் அமைத்திட, ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 29) மிளகாய் பயிர் ஊக்குவிப்புத் திட்டம்

கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, 2,470 ஏக்கர் பரப்பில் சீமைக்கருவேல மரங்கள் அகற்றப்பட்டு மிளகாய் பயிரிடப்பட்டது. 2024-2025-ஆம் ஆண்டிலும், மிளகாய் மண்டலம் ஏற்படுத்தப்பட்ட பகுதிகளான இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, தூத்துக்குடி, மாவட்டங்களில் மிளகாய் உற்பத்தியை அதிகரிக்க, 1,230 ஏக்கர் பரப்பில் சீமைக் கருவேல மரங்கள் அகற்றப்பட்டு மிளகாய் சாகுபடி செய்யப்படும். மேலும், நெல், இதர தானியங்களின் அறுவடைக்குப்பின்பு, 3,700 ஏக்கர் பரப்பளவில் மிளகாய் பயிரிட ஊக்குவிக்கப்படும். இராமநாதபுரம்,

சிவகங்கை மாவட்டங்களில் தேவைப்படும் இடங்களில் 200 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டு நீர் ஆதாரங்கள் ஏற்படுத்தப்படும். இதற்கென, 3 **கோடியே 67 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**30) மரவள்ளியில் மாவுப்பூச்சியினைக் கட்டுப்படுத்துதல்**

மரவள்ளி அதிகமாகப் பயிரிடும் மாவட்டங்களில் ஏற்படும் மாவுப்பூச்சி தாக்குதலால் உற்பத்தி குறைந்து, விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்தும் விதமாக ஒருங்கிணைந்த உர, பூச்சி மேலாண்மைக்காக 21,000 ஏக்கருக்கு, ஒரு கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கப்படும்.

**31) பேரீச்சை சாகுபடி**

இரும்பு சத்து அதிகமுள்ள பேரீச்சை சாகுபடியை தமிழ்நாட்டில் 250 ஏக்கர் பரப்பில் விரிவாக்கம் செய்ய, 30 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

**32) கொய்யாவில் பூச்சி மேலாண்மை**

கொய்யாவில் அறுவடைக் காலங்களில் உருவாகும் பழ ஈக்களால் அதிக சேதம் ஏற்பட்டு மகசூல் பாதிக்கப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்தும் விதமாக 10,000 ஏக்கருக்கு இனக்கவர்ச்சிப் பொறிகள் வழங்கிட, 50 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதியிலிருந்து ஒதுக்கப்படும்

**33) பந்தல் காய்கறிகள் ஊக்குவிப்புத் திட்டம்**

பந்தல் காய்கறிகளான பாகல், புடல், பீர்க்கன், சுரை போன்ற கொடி வகைக் காய்கறிகளின் உற்பத்தியைப் பெருக்கவும், உற்பத்தித்திறனை மேம்படுத்தவும், தரமான

விளைபொருட்களைப் பெறவும் உயர் தொழில்நுட்பமான நிரந்தரப் பந்தல் அமைப்பது இன்றியமையாதது. **2024-2025-ஆம் ஆண்டில், 770 ஏக்கர் பரப்பளவில்**, **9 கோடியே 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நிரந்தரப் பந்தல் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.**

**34) பாரம்பரிய இரகங்களுக்கு முக்கியத்துவம்**

அன்னை ஊட்டிய அமுதினைக் கண் முன்னே நிறுத்தும் சிறப்புடைய பாரம்பரிய காய்கறி இரகங்களை தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து மீட்டெடுத்து விவசாயிகளிடையே அந்த இரகங்களை ஊக்குவிக்கும் வகையிலும், 2,470 ஏக்கர் பரப்பு விரிவாக்கம் செய்யவும், 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**35) அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் நடவுச்செடிகள் விற்பனை மையம்**

அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் தோட்டக்கலை நடவுச் செடிகள், உயிர் உரங்கள், மண்புழு உரம், உயிரி பூச்சிக்கொல்லிகள், தோட்டக்கலை விளைபொருட்கள், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களோடு, வீட்டுத் தோட்டத்திற்குத் தேவையான மண்தொட்டிகள், செடிவளர்ப்புப் பைகள், கருவிகள் ஆகியவையும் பொதுமக்களுக்கு எளிதில் கிடைக்குமாறு விற்பனை செய்ய, முக்கிய சாலைகளை ஒட்டி அமைந்துள்ள பத்து அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் தோட்டக்கலை விற்பனை மையங்கள், ஒரு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**36) வட்டாரம் தோறும் தோட்டக்கலைப் பயிர்களுக்கான செயல் விளக்கம்**

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட வருவாய் கிராமங்களில் உள்ள விவசாயிகளை ஊக்குவிக்க, வட்டாரத்திற்கு ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கிராமத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களின் திட்டக்கூறுகளும் ஒரு விவசாயியின் நிலத்தில் ஒரு எக்டர் பரப்பளவில் செயல்விளக்கத் திடலாக அமைக்கப்படும். இதனால், அக்கிராமத்திலும் வட்டாரத்திலும் உள்ள அனைத்து விவசாயிகளும் தொழில்நுட்பச் செயலாக்கத்தை நேரில் கண்டறிந்து, பின்பற்றிட வழிவகை செய்யப்படும்.

**37) தொகுப்பு முறை சாகுபடியினை தொழில்நுட்ப ஆலோசனைகள் மூலம் வலுப்படுத்துதல்**

2023-2024-ஆம் ஆண்டு முதல் தொகுப்பு முறை சாகுபடியினை ஊக்குவிக்கும் விதத்தில் செயல்படுத்தப்பட்டு வரும், மல்லிகை இயக்கம், பலா இயக்கம், மிளகாய் இயக்கம், கறிவேப்பிலை இயக்கம் ஆகிய இயக்கங்களை வலுப்படுத்துவதற்காக, நவீன உயர் தொழில்நுட்பச் சாகுபடி குறித்த ஆலோசனைகள் விவசாயிகளின் தேவைக்கேற்பத் தோட்டக்கலைத்துறை வல்லுநர்களால் தொடர்ந்து வழங்கப்படும்.

**38) வட்டார அலுவலகங்களில் தகவல் மையம் ஏற்படுத்தி விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல்.**

உற்பத்தி, உற்பத்தித் திறனை அதிகரிக்கக் கூடிய சாகுபடித் தொழில்நுட்பங்கள், புதிய உயர் விளைச்சல் இரகங்கள், சந்தை வாய்ப்புகள், அதற்குரிய அரசுத் திட்டங்கள் குறித்த தகவல்கள் விவசாயிகளுக்கு எளிதாகக் கிடைத்திட, ஒவ்வொரு தோட்டக்கலை வட்டார அலுவலகத்திலும் தகவல் மையம் அமைக்கப்படும்.

**39) பருவமில்லா காலங்களிலும் முருங்கை உற்பத்தி**

தமிழ்நாட்டில் முருங்கை 51,800 ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டாலும் ஆண்டுதோறும் அக்டோபர் முதல் ஜனவரி மாதம் வரை முருங்கைக் காய்களின் வரத்து குறைவாகவே உள்ளது. நெகிழி விரிப்பான் கொண்டு முருங்கை மரத்தினை மூடுவதால் இலைகள், பூக்கள் உதிர்வதைத் தடுத்து பருவமில்லா காலங்களிலும் உற்பத்தியை உறுதி செய்திடும் நோக்கில், முதல்கட்டமாக இத்தொழில்நுட்பம் சிறிய அளவில் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் சோதனை முறையில் செயல்படுத்தப்படும்.

## வேளாண்மைப் பொறியியல் துறை

### 40) வேளாண் இயந்திரமயமாக்குதல்

**'பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில்**

**உடும்பு முக முழுக்கொழு மூழ்க ஊன்றி'**

என்ற பெரும்பாணாற்றுப்படை தொடரில் பண்டைய காலத்திலேயே நிலத்தை உழ **'ஏர்'** கருவி பயன்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளதன் மூலம் வேளாண்மையில் கருவிகளின் பயன்பாடு உணர்த்தப்பட்டுள்ளது.

வேளாண்மைத் தொழிலை ஆட்பற்றாக்குறையினால் நலிவுறாமல் காப்பதற்கு வேளாண் இயந்திரமயமாக்குதல் இன்றியமையாதது என்பதால், வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டம் தற்போது பெருமளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் விளையும் பயிர்களுக்கு ஏற்ற உழவு, நடவு, களையெடுத்தல், பயிர் மேலாண்மை, அறுவடை, பயிர்க்கழிவு மேலாண்மை போன்ற பணிகளை மேற்கொள்ள, பல்வேறு மாவட்ட விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, டிராக்டர், சுழற் கலப்பை, வரப்பு செதுக்கி சேறு பூசும் கருவி, நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம், களையெடுக்கும் கருவி, தெளிப்பான்கள், டிரோன், நெல் அறுவடை இயந்திரம், பல்வகைப் பயிர் கதிரடிக்கும் இயந்திரம் போன்ற வேளாண் இயந்திரங்கள், கருவிகள், விளைபொருட்களை உலரவைத்து மதிப்புக் கூட்டிட சூரிய கூடார உலர்த்திகள் ஆகியவை விவசாயிகள் பயனடையும் வகையில் மானியத்தில் வழங்கப்படும்.

மேலும், சிறு, குறு விவசாயிகள் தங்கள் சிறிய நிலப்பரப்பில் வேளாண் பணிகளைத் தாங்களே மேற்கொள்ள உதவும் வகையில், நடப்பாண்டில் பவர் டில்லர்கள், பவர் வீடர்கள் மொத்தம் 5,000 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, **2024-2025ஆம் ஆண்டில், பவர் டில்லர்களின் மானியத் தொகையானது 85 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் வரை உயர்த்தப்பட்டு, பவர் டில்லர்கள் 4,000 விவசாயிகளுக்கும், பவர் வீடர்கள் 4,000 விவசாயிகளுக்கும் வழங்கப்படும்.**

வயல்வெளிகளில் இரவு நேரங்களில் விவசாயிகள் எதிர்கொள்ளும் பாம்புக்கடிப் பிரச்சனை, மழைக்காலங்களில் ஏற்படும் சிரமங்களைத் தவிர்த்திடும் வகையில், தங்களது கிணறுகளுக்குச் செல்லாமலேயே மின்சார இணைப்பு பம்புசெட்டுகளை எங்கிருந்தாலும் எளிமையாக இயக்கவும், அவற்றின் இயக்கத்தினைக் கண்காணிக்கவும் கைபேசியால் இயங்கும் தானியங்கி பம்புசெட்டு கட்டுப்படுத்தும் கருவிகளை 10,000 விவசாயிகள் வாங்கிப் பயனடையும் வகையில், 50 சதவீத மானிய அடிப்படையில் அதிகபட்சமாக ஏழாயிரம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும்.

**வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தில் 26 ஆயிரத்து 179 விவசாயிகள் பயனடையும் வகையில், 2024-2025-ஆம் ஆண்டில் 170 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

## 41) எளியோர்க்கென இயந்திர வாடகை மையங்கள்

விவசாயிகளிடையே அதிகரித்து வரும் வேளாண் இயந்திரத் தேவையினை நிவர்த்தி செய்து, உயர்மதிப்பு வேளாண் இயந்திரங்கள் பயன்பாட்டினை ஊக்குவிக்க, தனியார் வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்க விவசாயிகள், ஊரகத் தொழில்முனைவோர்கள், விவசாயச் சங்கங்கள், விவசாயக் கூட்டுறவு சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு அரசு மானியம் வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக, பல்வேறு மாவட்ட விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, **2024-2025-ஆம் ஆண்டில், 207 வேளாண் இயந்திர வாடகை மையங்கள், மொத்தம் 32 கோடியே 90 இலட்சம் ரூபாய் மானியத்தில் அமைக்கப்படும்.**

மேலும், தனியார் வேளாண் இயந்திர உரிமையாளர்கள், விவசாயிகளை ஒருங்கிணைத்திட "தனியார் வேளாண் இயந்திரங்கள் வாடகை சேவை கைபேசி செயலி", 50 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

## 42) வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திர வாடகை திட்டத்தினை வலுப்படுத்துதல்

வேளாண்மைப் பொறியியல் துறையின் 2,700 வேளாண் இயந்திரங்கள், கருவிகள், இ-வாடகை ஆன்லைன் செயலி மூலமாக விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த குறைந்த வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இப்பணிக்கு மேலும் வலு சேர்க்க, 2024-2025-ஆம் ஆண்டில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

i) 85 மண்தள்ளும் இயந்திரங்களை எடுத்துச் செல்வதற்காக, 20 கனரக வாகனங்கள் கொள்முதல்,

ii) வேளாண் இயந்திரங்கள், உபகரணங்களைப் பாதுகாக்க, பழுது நீக்க, 25 வட்டாரங்களில் வேளாண் இயந்திரக் கூடாரங்கள்,

iii) 10 டிராக் வகை நெல் அறுவடை இயந்திரங்கள், 10 நெல் அறுவடை இயந்திரத்தினை சுமந்து செல்லும் வாகனங்கள் கொள்முதல்,

iv) அதிக தேவையுள்ள வேளாண் கருவிகள், மண் அள்ளும் இயந்திரங்களுக்கான உதிரி பாகங்கள், கிரேன்கள், மின்சார ஜெனரேட்டர்கள் கொள்முதல்,

v) வேளாண் இயந்திரங்களைச் சுத்தம் செய்து, பயன்படுத்தத் தேவையான வேளாண் இயந்திரங்கள் பராமரிப்புக்கான தொகுப்புகள் கொள்முதல்,

ஆகிய பணிகளை மேற்கொள்ள **மொத்தம் 28 கோடியே 82 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

## 43) சிறு, குறு விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் வாங்கிடக் கூடுதல் மானியம்

பல்வேறு கருத்துக்கேட்புக் கூட்டங்களில், உழவர் பெருமக்கள் கோரியபடி, வேலையாட்கள் பற்றாக்குறை காரணமாக குறித்த நேரத்தில் வேளாண் பணிகளை மேற்கொள்வதில் சிறு, குறு விவசாயிகளுக்கு ஏற்படும்

சிரமங்களைக் குறைக்கும் வகையில், நெல் நாற்று நடவு இயந்திரங்கள் உள்ளிட்ட வேளாண் இயந்திரங்களை வாங்கிப் பயன்படுத்துவதை ஊக்குவிக்க, நடைமுறையிலுள்ள 50 சதவீத மானியத்துடன் கூடுதலாக 10 சதவீத மானியம் சேர்த்து, மொத்தமாக 60 சதவீத மானியம் வழங்கிட, 2024-2025-ஆம் ஆண்டில் 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**44) நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரங்கள்**

கொள்முதலுக்கு ஏற்றவாறு நெல்லின் ஈரப்பதத்தைக் குறைப்பதன் மூலம் நெல்லின் சேமிப்புக் காலம் அதிகரிக்கும். இதனைக் கருத்தில் கொண்டு, விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டத்தில், தனிப்பட்ட விவசாயிகள், விவசாய சுய உதவிக் குழுக்கள், விவசாயக் கூட்டுறவு சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், தொழில் முனைவோர்களுக்கு, 10 நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரங்கள் மானியத்தில் வழங்கிட, 90 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**45) வேளாண் இயந்திரங்களைப் பரவலாக்குதலுக்கான நடவடிக்கைகள்**

விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள், கருவிகளை இயக்குதல், பராமரித்தல் தொடர்பான மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்கள் நடத்தப்படுவதோடு, தொழில்நுட்பக் கையேடும் தயார் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கும், கள அலுவலர்களுக்கும் பகிரப்படும்.

**46) நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகள் செயல்விளக்கம்**

நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகள் 30 இலட்சம் ரூபாய் செலவில் அரசு இயந்திரக் கலப்பை பணிமனைகளில் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்வதுடன், குறைந்த வாடகைக்கும் வழங்கப்படும்.

மேலும், புதுமையான வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடத்தில் ஊக்குவிக்கும் பொருட்டும், அத்தொழில்நுட்பங்களுக்கு ஒன்றிய அரசின் திட்டங்களின் கீழ் மானியம் வழங்கிட ஆவன செய்திடவும், 2024-2025-ஆம் ஆண்டில் பல்வேறு தனியார், அரசு, ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, புதுமையான தொழில்நுட்பங்கள் குறித்த செயல் விளக்கங்கள் நடத்தப்படும்.

**47) பயிர்களைக் காத்திட சூரிய சக்தி மின் வேலிகள்**

"**ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்**

**நீரினும் நன்றதன் காப்பு**" என்பது வள்ளுவர் வாக்கு.

வறட்சி, மழை, வெள்ளம், பூச்சித் தாக்குதல் போன்ற பல சவால்களுக்கிடையே, தான் இளைத்தாலும் பயிர்கள் செழிக்கப்பாடுபடும் விவசாயிகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பது விளைந்த பயிர்களுக்கு விலங்குகளால் ஏற்படும் சேதாரமாகும். அதிகரித்து வரும் மனித-விலங்கு மோதல்களால், பாடுபட்டு வளர்த்த பயிர்கள் பாழாகும் நிலையை மாற்றி, விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் ஆபத்தில்லாமல் பயிர்களைக் காத்திடும் நோக்கில், 2024-2025-**ஆம் ஆண்டில், 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் விவசாயிகளுக்கு**

**75 ஆயிரம் மீட்டர் நீளத்திற்கு சூரிய சக்தி மின்வேலிகள் அமைத்துத் தரப்படும்.**

**48) நீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் அமைத்தல், பராமரித்தல்**

குளம் தொட்டு, வளம் பெருக்கி வாழ்ந்த தமிழ்நாட்டில், விவசாயத்திற்குத் தேவைப்படும் நீர்ப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் பொருட்டு, மழை நீரைச் சேகரித்து, நிலத்தடி நீர் மட்டத்தினை அதிகரிக்க, புதிய நீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் அமைத்திடவும், ஏற்கனவே அமைக்கப்பட்ட நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளைத் தூர்வாரி, ஆழப்படுத்தி அவற்றின் கொள்ளளவை அதிகரிக்கவும், 2024-2025-ஆம் ஆண்டில், பல்வேறு நீர்வடிப்பகுதிகளில் 100 புதிய நீர்சேகரிப்புக் கட்டமைப்புகள் அமைக்கப்படுவதோடு, 500 நீர்சேகரிப்புக் கட்டமைப்புகளில் பராமரிப்புப் பணிகளும், 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

**49) டெல்டா மாவட்டங்களில் "சி", "டி" பிரிவு வாய்க்கால்களைத் தூர்வாருதல்**

கடந்த இரண்டு ஆண்டுகளில் செயல்படுத்தியதைப் போலவே, மூன்றாம் கட்டமாக, 2024-2025-ஆம் ஆண்டில், காவேரி, வெண்ணாறு, கல்லணை வடிநிலப்பகுதிகளில் உள்ள தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், அரியலூர், திருச்சி ஆகிய ஏழு மாவட்டங்களில், ஒரு இலட்சத்து 57 ஆயிரம் ஏக்கர் பயன் பெறும் வகையில், 2,235 கிலோ மீட்டர் நீளத்திற்கு "சி" , "டி" பிரிவு வாய்க்கால்களைத் தூர்வாரும் பணிகள், 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**50) விவசாயிகளுக்கு மழை நீர் சேகரிப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல்**

ஒவ்வொரு மாவட்டத்திலும் வேளாண்மைப் பொறியியல் துறையும், வேளாண் அறிவியல் நிலையங்களும் இணைந்து, விவசாயிகளுக்கு மழை நீர் சேகரிப்பு முறைகளான கோடை உழவு, பண்ணைக் குட்டை, தடுப்பணை போன்ற மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளின் முக்கியத்துவம், அவற்றினை பராமரித்தல் போன்றவை குறித்து துண்டு பிரசுரங்கள், காணொலிக் காட்சிகள், வானொலி செய்திகள், செயல் விளக்கங்கள், கருத்தரங்குகள், கிராம அளவிலான விவசாய முகாம்கள், கிராம சபைக் கூட்டங்கள், பட்டறிவுப் பயணங்கள் போன்ற உத்திகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும்.

## வேளாண்மை விற்பனை-வேளாண் வணிகத் துறை

வியர்வை சிந்தி, விளைந்த பலனை விவசாயிகள் முழுமையாக அடையும் நோக்கத்தினை ஈடேற்றும் வகையில், அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைக்கும் தொழில்நுட்பங்கள், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், சந்தை இணைப்பு வழிமுறைகள், ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், உழவர் சந்தைகள் வாயிலாக நியாயமான விலை, வெளிப்படையான வர்த்தகம், மின்னணு, இணைய வழி வர்த்தக நடைமுறைகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**51) தானியங்களை உலர்த்துவதற்கு நடமாடும் உலர்த்திகள்**

உணவு தானியங்களின் ஈரப்பதம் சரியான அளவில் பராமரிக்கப்பட்டு, நீண்ட நாட்களுக்கு வீணாகாமல் சேமித்து

வைக்க ஏதுவாக, திருவண்ணாமலை, தருமபுரி, விழுப்புரம், கடலூர், இராணிப்பேட்டை, திருவள்ளூர், தஞ்சாவூர் நாகப்பட்டினம், திருவாரூர், தேனி ஆகிய 10 மாவட்டங்களில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு, தானியங்களை உலர்த்துவதற்கான நடமாடும் உலர்த்திகள், 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாங்கப்படும்.

## 52) மஞ்சள் மெருகூட்டும் இயந்திரம்

நாட்டின் முக்கியமான மஞ்சள் சந்தைகளில் ஒன்றானது ஈரோடு. அறுவடைக்குப்பின் மஞ்சளைப் பதப்படுத்தி, மெருகேற்றம் செய்வதன் மூலம் மஞ்சளின் சேமிப்புக்காலமும் தரமும் மேம்படுத்தப்படுகிறது. எனவே, மஞ்சள் விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக மஞ்சளுக்கென ஐந்து மெருகூட்டும் இயந்திரங்களும், எட்டு மஞ்சள் வேகவைக்கும் இயந்திரங்களும், 2 கோடியே 12 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதியில், ஈரோடு, கள்ளக்குறிச்சி, தருமபுரி மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைக்கப்படும்.

## 53) மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களுக்குப் பொது முத்திரை, சிப்பமிடல் வசதிகள்

விவசாயிகளின் வருமானத்தை உயர்த்திட, விளைபொருட்களைத் தனியார் நிறுவனங்களுக்கு நிகராக மதிப்புக்கூட்டி திறம்பட சந்தைப்படுத்தி, விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், வேளாண் தொழில்முனைவோர்களின் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கான பொது முத்திரை

வடிவமைக்கப்படும். சிப்பம் கட்டுவதற்கும், முத்திரையிடுவதற்குமான பொதுக் கட்டமைப்பு வசதிகள் சென்னையிலும் கோவையிலும், 4 கோடியே 10 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

**54) கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் பலா மதிப்புகூட்டுதலுக்கான மையம்**

முக்கனிகளில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கும் பலாவில் நிறைவான ஆரோக்கியத்திற்குத் தேவையான சத்துக்கள் செறிந்துள்ளன. பலாவிலிருந்து பல்வேறு மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. இதற்கென, பண்ருட்டியில் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, பல்வேறு மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை ஏற்றுமதித் தரத்தில் தயாரித்து விற்பனை செய்திட ஏதுவாக, பலா மதிப்புக்கூட்டுதலுக்கான மையம், 16 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒன்றிய, மாநில அரசு நிதியில் ஏற்படுத்தப்படும்.

**55) பெரம்பலூர் மாவட்டத்தில் சிறுதானியங்களுக்கான தொழில்நுட்ப வணிக மேம்பாட்டு மையம்**

பெரம்பலூர் மாவட்டத்தில் மக்காச்சோளம், சிறுதானியங்கள் பயிரிடும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, தேவையான கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய தொழில்நுட்ப வணிக மேம்பாட்டு மையம், 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இங்கு சிறுதானியங்கள், மக்காச்சோளம் மதிப்புக்கூட்டும் தொழில்நுட்பங்கள் குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், விவசாயிகள், சுய உதவிக் குழுக்கள், உழவர் ஆர்வலர்

குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு அளிக்கப்படும்.

**56) ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கட்டமைப்பு வசதிகளைப் புதுப்பித்தல்**

தமிழ்நாட்டில் 2023-2024-ஆம் ஆண்டில், 100 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் கட்டமைப்புகளைப் புதுப்பிக்க, 47 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2024-2025-ஆம் ஆண்டில் 100 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களின் கட்டமைப்பு வசதிகள், 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

**57) வேளாண் விளைபொருட்களுக்குப் புவிசார் குறியீடு**

**புவிசார் குறியீடு** பெறப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்துவதால் அவற்றின் தேவை, ஏற்றுமதி அளவு ஆகியன அதிகரிக்கும். எனவே, நமது மண்ணின் அடையாளங்களான மாநிலத்தின் தனித்துவமான 25 வேளாண் விளைபொருட்களுக்குப் புவிசார் குறியீடு பெற கடந்த மூன்று ஆண்டுகளில், விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இதேபோல், 2024-2025-ஆம் ஆண்டில் சத்தியமங்கலம் செவ்வாழை (ஈரோடு), கொல்லிமலை மிளகு (நாமக்கல்), மீனம்பூர் சீரக சம்பா (இராணிப்பேட்டை), ஐயம்பாளையம் நெட்டைத் தென்னை (திண்டுக்கல்), உரிகம்புளி (கிருஷ்ணகிரி), புவனகிரி மிதி பாகற்காய் (கடலூர்), செஞ்சோளம்(சேலம், கரூர்), திருநெல்வேலி அவுரி இலை (திருநெல்வேலி), ஓடைப்பட்டி விதையில்லா திராட்சை (தேனி), செங்காந்தள் (கண்வலி) விதை (கரூர், திண்டுக்கல், திருப்பூர்) ஆகிய 10 பொருட்களுக்குப் புவிசார் குறியீடு, 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பெறப்படும்.

**58) அப்பீடா (APEDA) பயிற்சி பெற்ற விவசாயிகளை ஏற்றுமதியாளர்களாக்குதல்**

பல்வேறு மாவட்ட விவசாயிகளின் கோரிக்கைக்கிணங்க, மா, தென்னை, சிறுதானியங்கள், முருங்கை, மஞ்சள், சின்ன வெங்காயம், வெள்ளரி ஆகியவற்றைப் பயிரிடும், அப்பீடா பயிற்சி பெற்ற நூறு விவசாயிகளைத் தேர்வு செய்து, அவர்களை நூற்றுக்கு நூறு ஏற்றுமதியாளர்களாக மாற்றுவதற்கான உரிய சான்றிதழ்களைப் பெற்றுத் தரும் பொருட்டு, ஒரு நபருக்கு 15,000 ரூபாய் வீதம் 15 இலட்சம் ரூபாய் மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**59) விளைபொருட்களின் விற்பனையை இணையவழி வர்த்தகத் தளங்களுடன் இணைத்தல்**

புதிய சந்தை வாய்ப்புகளை உருவாக்கிட, இணையவழி வர்த்தக நிறுவனங்கள் வாயிலாக உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோருக்குமான இணைப்பினை ஏற்படுத்தி விளைபொருட்களை விற்பனை செய்ய உகந்த சூழல் உருவாக்கப்படும். இதன் மூலம் உற்பத்தியாளர்களுக்குக் கூடுதல் வருவாயும், தரமான பொருட்கள் நுகர்வோர்களுக்கு நியாயமான விலையிலும் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

**60) வேளாண் வர்த்தக மேம்பாட்டிற்கான முனைப்புகள்**

விளைவித்த விவசாயியே விலை வைக்கும் நிலையினை உருவாக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படும். வர்த்தகம் மேம்பட விவசாயிகளின் விளைபொருட்கள் இருப்பையும், வர்த்தகர்களின்

தேவையையும் இணைத்து சமூக வலைதளக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுடன் இணைக்கப்படும். அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள், சந்தைப்படுத்துதல், தரம் பிரித்தல், மதிப்புக்கூட்டுதல், ஏற்றுமதி வழிமுறைகள் போன்றவை குறித்து ஒவ்வொரு வட்டாரத்திலும் இரண்டு கிராமங்கள் வீதம் மாதம் ஒன்றிற்கு, 770 தீவிர விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு இரண்டாண்டுகளில் அனைத்து கிராமங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

### 61) பண்ணை வழி வர்த்தகத்தை ஊக்குவித்தல் (Facilitating Farm Gate Trade)

தமிழ்நாட்டிலுள்ள 284 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், 157 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மின்னணு தேசிய வேளாண் சந்தையுடன் (eNAM) ஒருங்கிணைக்கப்பட்டு வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை, 40 கோடி ரூபாய் மதிப்புள்ள 8,300 மெட்ரிக் டன் வேளாண் விளைபொருட்கள் விவசாயிகளின் விளைநிலங்களிலேயே வணிகம் செய்யப்பட்டுள்ளன. 2024-2025-ஆம் ஆண்டில் பண்ணை வழி வர்த்தகம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு 60 கோடி ரூபாய் மதிப்பிலான விவசாயிகளின் விளைபொருட்களுக்கு சிறந்த விலை கிடைக்க வழி வகை செய்யப்படும்.

### 62) விவசாயிகளுக்குப் பொருளீட்டுக் கடன் வரம்பினை உயர்த்துதல்

அறுவடைக் காலங்களில் வேளாண் விளைபொருட்களின் அதிக வரத்து காரணமாக ஏற்படும்

விலை வீழ்ச்சியைத் தவிர்க்க, விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் பொருட்களை இருப்பு வைத்து, பொருளீட்டுக்கடன் பெறுகின்றனர். இவ்வாறு விவசாயிகளுக்கு வழங்கப்படும் பொருளீட்டுக்கடனின் வரம்பு, 3 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

**63) சேமிப்புக் கிடங்குகளுக்கு கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தின் அங்கீகாரம்**

மின்னணு மாற்றத்தகு கிடங்கு இரசீது (e-Negotiable Warehouse Receipt) முறை 150 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களிலுள்ள சேமிப்புக் கிடங்குகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2024-2025-ஆம் ஆண்டில், கூடுதலாக 100 சேமிப்புக் கிடங்குகளுக்கு, கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தின் அங்கீகாரம் பெறப்பட்டு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன்பெற வழிவகை செய்யப்படும்.

**64) புத்தாக்க நிறுவனங்களை (Start-up) ஊக்குவித்தல்**

வேளாண்மை, வேளாண் சார்ந்த தொழில் தொடங்கும் புத்தாக்க நிறுவனங்களைக் கண்டறிந்து, அவற்றின் நோக்கம், செயல்பாடு, வணிக திட்டத்தினை ஆய்வு செய்து, தகுதியுள்ள புத்தாக்க நிறுவனங்களுக்கு மானியம் அளித்து மேம்படுத்திட, 10 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**65) வேளாண் கண்காட்சிகள்**

2023-24ஆம் ஆண்டில் சென்னையிலும், திருச்சியிலும் நடத்தப்பட்ட வேளாண் கண்காட்சிகளுக்கு விவசாயிகள், பொதுமக்களிடையே கிடைத்த பெரும் வரவேற்பினைத்

தொடர்ந்து, 2024-2025-ஆம் ஆண்டிலும், மூன்று இடங்களில் வேளாண் கண்காட்சிகள் நடத்தப்படும். இதற்கென 9 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

## விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றுத்துறை

**விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றுத்துறை இனி விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத்துறை என பெயர் மாற்றம் செய்யப்படும்.**

66) **விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையினால்**,

- ஒருங்கிணைந்த விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு வளாகம் கரூர், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் அமைக்கவும்,
- விதை மரபணு தூய்மையை உறுதி செய்வதற்காக, தானியங்கி மூன்றாம் தலைமுறை டிஎன்ஏ மார்க்கர் அடிப்படையிலான தொழில்நுட்பங்களுடன் கூடிய ஆய்வகத்தை கோயம்புத்தூரில் அமைக்கவும்,
- தமிழ்நாட்டில் உயிர்மச் சான்றளிப்பை ஊக்குவிக்கும் வகையில், தேசிய உயிர்ம உற்பத்தி திட்டத்தில் பதிவு செய்யப்பட்டு உயிர்ம நிலையை அடைந்த விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கிடவும்,
- தருமபுரி, காஞ்சிபுரம், மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சி ஆகிய ஆறு விதைப் பரிசோதனை நிலையங்களுக்கு NABL (National Accreditation Board for Testing and Calibration Laboratories) தரச்சான்று பெற்றிடவும்,

- உயிர்ம விளைபொருட்களில் இருக்கும் நச்சுப் பொருட்களின் தன்மையினை விவசாயிகள் அறிந்து, அதன் தரத்தை உறுதிப்படுத்தி ஏற்றுமதி செய்ய, எஞ்சிய நச்சு மதிப்பீடு பரிசோதனை செய்வதற்கான கட்டணத்திற்கு முழு மானியம் வழங்கவும்,

**2024-2025-ஆம் ஆண்டில் 9 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

இது தவிர, முன்னணி விதை நிறுவனங்களின் விதைகள் மாற்றுப்பெயரில் சந்தையில் வராமல் கண்காணித்து, விவசாயிகளுக்குத் தரமான விதைகள் கிடைக்கச்செய்யும் வகையில் புதிய பதிவு முறை அறிமுகப்படுத்தப்படுவதோடு, தனியார் நாற்றங்கால்களில் உற்பத்தி செய்யப்படும் நாற்றுகள், நடவுப்பொருட்களின் தரம், அவற்றுக்கான விதைகள் பெறப்பட்ட இடம் ஆகியவை விதைச்சட்டத்தின்படி உறுதி செய்யப்படும். அதிக விளைச்சலைத் தரும் தரமான வீரிய ஒட்டு மக்காச்சோள விதைகள் விவசாயிகளுக்குக் கிடைக்கும் வகையில் சான்றளிப்பு, விதை ஆய்வு, விதைப்பரிசோதனை போன்ற நடவடிக்கைகள் விதைச்சட்டங்கள் மூலம் மேற்கொள்ளப்படும்.

## தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை

67) **பெரம்பலூர், தூத்துக்குடி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், தருமபுரி, திண்டுக்கல், விருதுநகர் ஆகிய** ஏழு மாவட்டங்களில், 25 வட்டாரங்களிலுள்ள 275 நீர்வடிப்பகுதிகளில், **43 கோடி ரூபாய் மதிப்பீட்டில்** இயற்கை வள மேம்பாட்டுப் பணிகள், உற்பத்திப் பணிகள், வாழ்வாதாரப் பணிகள் ஆகியவை

நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் 2024-2025-ஆம் ஆண்டில் ஒன்றிய, மாநில அரசு நிதியில் செயல்படுத்தப்படும்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

**68) தோட்டக்கலைப் பயிர்களுக்கு வேளாண் இடுபொருட்களை துல்லியமாகத் தெளிக்கச் செய்வதற்கான ட்ரோன் தெளிக்கும் தொழில்நுட்பம்**

தோட்டக்கலைப் பயிர்களுக்கான வேளாண் இடுபொருட்களை ட்ரோன்கள் மூலம் துல்லியமாகத் தெளிக்கச் செய்வதற்கான தொழில்நுட்பங்களை உருவாக்கி, கிராமப்புர இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் பொருட்டு, பயிற்சி, செயல் விளக்கத் திடல்கள் ஏற்படுத்தப்படும்.

**69) நீரிழிவு நோயாளிக்கு ஏற்ற, சத்துகள் செறிவூட்டப்பட்ட நெல் இரகங்களை உருவாக்குதல்**

குறைந்த சர்க்கரை அளவு குறியீடு (Low Glycemic Index), அதிக ஊட்டச்சத்து உள்ள பராம்பரிய நெல் இரகங்களை மேம்படுத்தவும், நேரடி நெல் விதைப்பிற்கு ஏற்ற நெல் இரகங்களை, துரித இனப்பெருக்க முறை வாயிலாக உருவாக்கவும், தேவையான ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**70) மஞ்சள், மரவள்ளிக்கிழங்கு, வெங்காயம் சாகுபடியில் இயந்திரமயமாக்கல்**

தமிழ்நாட்டில் மஞ்சள், மரவள்ளிக்கிழங்கு, வெங்காய சாகுபடியினை இயந்திரமயமாக்குவதற்கு சாத்தியக்கூறு சோதனை, இயந்திரங்கள் உற்பத்தி, செயல்விளக்கங்கள் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

**71) நிலசம்பங்கி, செவ்வந்தி, ரோஜாவில் புதிய இரகங்களுக்கான ஆராய்ச்சி**

நிலசம்பங்கி, செவ்வந்தி, ரோஜா ஆகிய தோட்டக்கலைப் பயிர்களில் புதுமையான மரபியல் முறைகளைக் கையாண்டு, மேம்பட்ட பண்புகளைக் கொண்ட இரகங்களை உருவாக்குவதற்குத் தேவையான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டங்களுக்காக, 5 கோடியே 44 இலட்சம் ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**72) தமிழ்நாடு வேளாண் பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (TNAPEX)**

உணவு பதப்படுத்தும் திட்டத்தில், தற்போதுவரை, 627 கோடியே 65 இலட்சம் ரூபாய் அளவிற்கான கடன், மொத்தம் 10,548 குழுக்களுக்கும் தனி நபர்களுக்கும் வழங்கப்பட்டு, மானியமாக 196 கோடியே 89 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. **நாட்டிலேயே இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தியமைக்கு, ஒட்டுமொத்த செயல்பாட்டிற்கான விருதினை நம் மாநிலம் பெற்றுள்ளதை இம்மாமன்றத்தில் பெருமிதத்துடன் பதிவு செய்கிறேன்.**

தமிழ்நாடு வேளாண் பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 2024-2025-ஆம் ஆண்டில்,

i) தருமபுரி, திண்டுக்கல், நீலகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள வேளாண் முதன்மை பதப்படுத்தும் மையங்களின் பயன்பாட்டை அதிகரிக்க அவற்றில் மதிப்புக்கூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் தயாரிக்கும் தொழில் கூடங்களும்,

ii) வேளாண் தொழில் பெருந்தடமாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றான தஞ்சாவூரில் வேளாண் விளை பொருட்கள், கழிவுகளிலிருந்து ஏற்றுமதி சந்தை வாய்ப்புள்ள மூலக்கூறுகளைப் பிரித்தெடுப்பதற்கான கட்டமைப்புகளும்.

iii) கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, வேலூர் ஆகிய இடங்களில் ஏற்றுமதி தரப் பரிசோதனை செய்து சான்றிதழ் வழங்குவதற்கான உணவுப்பரிசோதனை ஆய்வகங்களும்,

iv) அரிசி, மா, வாழை, கொய்யா, தக்காளி, மிளகாய் போன்ற வேளாண்விளைபொருட்களுக்கும், கடல் சார் மீன் பொருட்களுக்கும், இடுபொருள் வழங்கல், உற்பத்தி, அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை, பதப்படுத்துதல், நுகர்வு மேலாண்மை போன்ற பல்வேறு செயல்பாடுகளை உள்ளடக்கிய மதிப்புச் சங்கிலிகள் உருவாக்கிடும் திட்டம் உட்பட மேற்கண்ட திட்டங்கள் **மொத்தம் 72 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

**73) கூட்டுறவு, உணவு, நுகர்வோர் பாதுகாப்பு**

**i) கூட்டுறவு பயிர்க்கடன்**

2022-2023-ஆம் நிதியாண்டில், இதுவரை இல்லாத அளவிற்கு, 13,442 கோடி ரூபாய் பயிர்க்கடனாக 17 இலட்சத்து 44 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2023-2024-ஆம் நிதியாண்டில், 16,500 கோடி ரூபாய் பயிர்க்கடன் என்ற உயரிய இலக்கினை நிர்ணயித்து, இதுவரை 13,600 கோடி ரூபாய் பயிர்க்கடனாக, 16 இலட்சத்து 19 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**2024-2025-ஆம் ஆண்டிற்கு, பயிர்க்கடன் வழங்க 16,500 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

2023-2024-ஆம் ஆண்டில் ஆடு, மாடு, கோழி, மீன் வளர்ப்போருக்கு பராமரிப்பு, நடைமுறை முதலீட்டுக் கடன் இலக்காக, 2,300 கோடி ரூபாய் நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 1,900 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

2024-2025-ஆம் ஆண்டிற்கு, பயிர்க்கடன் வட்டி மானியத்திற்கென 700 கோடி ரூபாயும், ஆடு, மாடு, கோழி, மீன் வளர்ப்போருக்கு நடைமுறை முதலீட்டுக் கடன் வட்டி மானியத்திற்கென, 200 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், கூட்டுறவு கடன் வழங்கும் நிறுவனங்களை, குறிப்பாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளைக் கணினிமயமாக்கும் திட்டம் 141 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளது. இதனால், கூட்டுறவு நிறுவனங்கள் கடன் வழங்கும் முறை இணையமயமாக்கப்பட்டு, கடன் ஒப்பளிப்பு வழங்கும் நேரம் குறைக்கப்பட்டு, வெளிப்படைத் தன்மை மேம்படுத்தப்படும்.

**ii) பல்நோக்கு சேவை மையம்**

தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களின் செயல்பாடுகளை விரிவுபடுத்தி வேளாண் சேவை மையங்கள், ஊரக வணிக நிலையங்கள், பதப்படுத்தும் நிலையங்கள், சேமிப்புக் கிடங்குகள் ஆகியவற்றை உள்ளடக்கி ஊரக மக்களுக்குப் பயனளிக்கும் வகையில், பல்நோக்கு சேவை மையங்களாக அவற்றை உருவாக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கென, 2,609 தொடக்க

வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு 4,757 திட்டங்களுக்காக, 457 கோடி ரூபாய் ஒப்பளிக்கப்பட்டு இதுவரை, 341 கோடி ரூபாய் கடனாக விடுவிக்கப்பட்டுள்ளது. இது தவிர, வேளாண் கட்டமைப்பு நிதியின் வட்டி மானியம் பெற்று 1,380 வேளாண் இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரங்கள் இ-வாடகை (உழவன் செயலி) செயலியில் இணைக்கப்பட்டு, அதன்மூலம் குறைந்த வாடகைக்கு இயந்திரங்கள் பெற்று விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர்.

**iii) மின்னணு வங்கி சேவைகள்**

நாட்டிலேயே முதன்முறையாக கூட்டுறவு வங்கிகளில் ஒருங்கிணைந்த பணப் பரிவர்த்தனை அமைப்பு (UPI) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், UPI, NEFT உள்ளிட்ட மின்னணு வங்கியியல் சேவைகள் மாதந்தோறும் ஒரு கோடிக்கும் அதிகமான வாடிக்கையாளர்களால் பயன்படுத்தப்பட்டு, சராசரியாக 30 இலட்சம் பரிவர்த்தனைகள் 17,000 கோடி ரூபாய் அளவில் கூட்டுறவு வங்கிகளில் நடைபெற்று வருகின்றன.

**iv) நேரடி நெல் கொள்முதல்**

நெல் அரவைத் திறனை மேலும் அதிகரித்திட, ஆறு புதிய நவீன அரிசி ஆலைகள் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படவுள்ளன. நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொணரப்பட்ட நெல்மணிகளை இயற்கையின் இடர்ப்பாடுகளிலிருந்து காத்திட, நெல் சேமிப்புக் கட்டமைப்புகள் 18 இடங்களில் 238 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன. மேலும், 250 மெட்ரிக் டன் கொள்ளளவிலான

55 எண்ணிக்கையிலான நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன.

**2024-2025-ஆம் ஆண்டில், உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் உணவு மானியத்திற்கு, 10,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு அரசின் நெல் கொள்முதல் ஊக்கத் தொகை வழங்குவதற்கு என, 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

74) **நீர்வளத்துறை**

நீரினைச் சேமித்து பாசனத்தினை மேம்படுத்தும் நோக்கத்தில் கதவணைகள், நீரொழுங்கிகள், தடுப்பணைகள், கால்வாய்கள், ஏரிகள் அமைத்தல், மாநிலத்திற்குள் நதிகளை இணைத்தல், நிலத்தடிநீரைச் செறிவூட்டுதல் போன்ற பணிகளை நீர்வளத்துறை மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டிலேயே ஒவ்வொரு ஆண்டும் தேவையான நிதியினை ஒதுக்கி, தென்மேற்குப் பருவ மழை துவங்கும் முன்பே, தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படுவதால், காவிரி நீர் கடைமடை வரை செல்வது உறுதி செய்யப்படுகிறது. **2024-2025-ஆம் ஆண்டில், காவிரி டெல்டா பகுதிகளில் தென்மேற்குப் பருவமழை தொடங்கும் முன், 5,338 கிலோ மீட்டர் நீளம் கொண்ட ஆறுகள், கால்வாய்கள், வாய்க்கால்களைத் தூர்வாருவதற்கு, 110 கோடி ரூபாய் செலவில், 919 பணிகள் மேற்கொள்ளப்படும்.**

**75) கால்நடை பராமரிப்பு**

தீவனப் பயிர் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலமும், கால்நடைகளுக்கான மருத்துவ வசதி அளிப்பதாலும் பால் உற்பத்தியை உயர்த்த இயலும். 2022–2023, 2023-2024-ஆம் ஆண்டுகளில் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டு, 2,000 ஏக்கர் தோப்புகள், பழத்தோட்டங்களில் ஊடுபயிராகத் தீவனசாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றியினைத் தொடர்ந்து, 2024-2025-ஆம் ஆண்டில் தோப்புகள், பழத்தோட்டங்களில் 5,000 ஏக்கர் பரப்பில் தீவனப்பயிரை ஊடுபயிராகப் பயிரிட ஏதுவாக, இத்திட்டம் 2 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்..

**76) மீன்வளம்**

உள்நாட்டு மீன்வளர்ப்போரை ஊக்குவித்து, உள்ளூர் சந்தைகளின் மீன் தேவையினைப் நிறைவு செய்திடும் வகையில், புதிதாக நன்னீர் மீன்வளர்ப்புக் குளங்கள் அமைத்தல், இடுபொருள் மானியம் வழங்குதல், உயிர்க்கூழ்ம முறையில் மீன்வளர்ப்பு, நீரினை மறுசுழற்சி செய்து மீன்வளர்ப்பு, மீன்தீவன ஆலை அமைத்தல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்திட, மொத்தம் 4 கோடியே 60 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும். இத்திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம், மீன்வளர்ப்போரின் வருவாய் கணிசமாக உயர்வதுடன் உள்நாட்டு மீன் உற்பத்தியும் அதிகரிக்கும்.

**77) ஊரக வளர்ச்சி**

**i) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் இயற்கை வள மேம்பாட்டுப் பணிகளான தடுப்பணைகள், பண்ணைக்குட்டைகள், நீர் செறிவூட்டு குழிகள், கல் வரப்பு போன்ற பல்வேறு வகையான பணிகளோடு நிலத்தடி நீர், மண்ணின் ஈரப்பதத்தை மேம்படுத்தத் தேவையான வறட்சித் தடுப்பு, நில மேம்பாடு, சிறு பாசன மேம்பாடு, பாரம்பரிய நீர்நிலைகள் புதுப்பித்தல் போன்ற விவசாயம் சார்ந்த பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

ஊரகப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்குச் சந்தைகளுடனான இணைப்பை உறுதி செய்வதற்கும், விவசாய விளைபொருட்களின் போக்குவரத்தை எளிதாக்குவதற்கும், சாலை இணைப்பு இல்லாத பழங்குடியின குடியிருப்புகள் உள்ள மலைப்பகுதிகளுக்கு ஓரடுக்கு கப்பிச்சாலை வசதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

2024-2025-ஆம் ஆண்டில் பண்ணைக்குட்டைகள், நீர் செறிவூட்டுத் தண்டுகள், கசிவு நீர் குட்டை, செறிவூட்டு கிணறுகள், புதிய குளங்கள், மண் வரப்பு, கல் வரப்பு போன்ற இரண்டு இலட்சம் பணிகள் 7,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**ii) பண்ணை மகளிர் சுய உதவிக் குழுக்கள்**

விதைப்பு முதல் வேளாண்மை தொடர்பான அனைத்துப் பணிகளிலும் மகளிரின் பங்கு மிகமுக்கியமாகும். எனவே, 2024-2025-ஆம் ஆண்டில், ஆர்வமுள்ள, பயிற்சி பெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்களைக் கொண்டு, தோட்டக்கலைத்துறையின்

ஒருங்கிணைப்பின் மூலம், 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 60 தென்னை நாற்றுப்பண்ணைகள் அமைக்கப்படும். தென்னங்கன்றுகள் தோட்டக்கலைத் துறையினால் கொள்முதல் செய்யப்பட்டு, அரசுத் திட்டங்களின் கீழ் விநியோகிக்கப்படும்.

மேலும், வேளாண் உற்பத்திக்கு விதையே முக்கிய இடுபொருள் என்பதால், பயறு வகைகள், எண்ணெய்வித்துகளில், 100 விதை உற்பத்தித் தொகுப்புகள் அமைப்பதற்கு, 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். இதற்குத் தேவையான பயிற்சியும், ஆதார விதைகளும் வேளாண்மைத்துறை வழங்குவதுடன், மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்த விதைகளை, உற்பத்தி மானியம் வழங்கி வேளாண்மைத் துறையே கொள்முதல் செய்து, வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

**78) எரிசக்தித் துறை**

பாசன வேளாண்மையினால் ஏற்படும் ஆதாயங்களை உணர்ந்து நிலத்தடி நீரினைப் பயன்படுத்தி விவசாயிகள் அதிக உற்பத்தி செய்து உலகுக்கு அளித்து, தாமும் உய்யவேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு, வேளாண் பாசனத்திற்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை, 23 இலட்சத்து 51 ஆயிரம் இலவச மின் இணைப்புகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்குத் தேவையான கட்டணத்

தொகையாக, சுமார் 7,280 கோடி ரூபாய் நிதியினை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு அரசு வழங்கும்.

**79) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை**

i) தருமபுரி, திருப்பூர், புதுக்கோட்டை, சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், தூத்துக்குடி ஆகிய ஏழு மாவட்டங்களின் 55 வட்டங்களில் உள்ள 110 கிராமங்களில் வறட்சித் தணிப்பிற்கான சிறப்பு உதவித் திட்டம், 2024-2025-ஆம் ஆண்டு முதல், 110 கோடியே 59 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

ii) தமிழ்நாட்டில் விளைவிக்கப்படும் பயிர்களின் விவரங்களைக் கணக்கிடுவதற்கான மின்னணு முறையிலான பயிராய்வு (Digital Crop Survey) மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனைக் கொண்டு 2024-2025-ஆம் ஆண்டு முதல் இணையவழியில் விவசாயிகளுக்கு அடங்கல் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**80) பனை பொருள் வளர்ச்சி பனை மேம்பாட்டு இயக்கம்**

தமிழ்நாட்டில் பனை மரங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருவதை அரசு கவனத்தில் கொண்டு, பனை மரங்களின் எண்ணிக்கையினை அதிகரிக்கும் பொருட்டு, மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து பனை மேம்பாட்டு இயக்கத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில், 47 இலட்சம் பனை விதைகள் நடப்பட்டதுடன், 950 நபர்களுக்குத் தரமான பனை வெல்லம், பனங்கற்கண்டு, மதிப்புக் கூட்டுப் பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சியும் கருவிகளும் அளிக்கப்பட்டு, 350 மகளிருக்கு பனை ஓலைப்

பொருட்கள் தயாரிக்கும் பயிற்சியும் கருவிகளும் வழங்கப்பட்டன.

2024-2025ஆம் ஆண்டில், பனை சாகுபடியினை ஊக்குவிக்க, 10 இலட்சம் பனை விதைகள் தோட்டக்கலைத் துறையின் மூலம் நடப்படும். மேலும், பனைத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு 200 பனைத்தொழிலாளர்களுக்கு, தரமான பனை வெல்லம், பனங்கற்கண்டு, பிற மதிப்புக் கூட்டுப் பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சிகளும், 100 மகளிருக்கு பனை ஓலைப்பொருட்கள் தயாரிக்கும் பயிற்சியும், பயிற்சி பெற்ற அனைவருக்கும் உரிய கருவிகளும் வழங்கப்படும். இதற்கென, ஒரு கோடியே 14 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2024-2025-ஆம் ஆண்டில் வேளாண்மை மற்றும் அதன் தொடர்புடைய துறைகளான கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை, பால்வளத்துறை, நீர்வள ஆதாரத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, உணவுத்துறை, கூட்டுறவுத்துறை, வருவாய்த்துறை, வனத்துறை, பட்டு வளர்ச்சித்துறை ஆகியவற்றின் மானியக் கோரிக்கைகளின் கீழ் 42 **ஆயிரத்து 281 கோடியே 87 இலட்சத்து 84 ஆயிரம்** ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (அட்டவணை 1)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

உழவர்களின் பெருந்தன்மையை புறநானூற்றுப்பாடல்

"**வரகும் தினையும் உள்ளவை எல்லாம்**
**இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்**
**குறித்துமாறு எதிர்ப்பை பெறாஅமையின்**
**குரல் உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து**

விதைக்காக விடப்பட்டிருக்கும் தினையையும், விருப்பத்துடன் உரலில் இட்டு இடித்துச் சமைத்து உணவு அளிப்பவர்கள் உழவர்கள் என்று உழவர்களின் உன்னதப்பண்பை உணர்த்துகிறது. வறியநிலையில் இருந்தாலும், பெருந்தன்மையோடு இருக்கும் இத்தகைய உழவர் பெருமக்களின் நலனைப் பேணிக்காக்கும் அரசுதான் நம் அரசு.

"**வான்நோக்கி வாழும் உலகுஎல்லாம் மன்னவன்**
**கோல்நோக்கி வாழும் குடி**"

**(திருக்குறள் - 542)**

உலகில் உள்ள உயிர்கள் வாழ்வதற்கு மழை தேவைப்படுவதுபோல ஒரு நாட்டில் குடிமக்கள் வாழ்வதற்கு நல்லாட்சி தேவைப்படுகிறது,

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க, நல்லாட்சி செய்துவரும் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்** உழவர் நலன்காக்க, இந்த மாமன்றத்தில் கடந்த ஆண்டுகளைப் போலவே, தமிழ்நாட்டின் நான்காம் வேளாண் நிதிநிலை அறிக்கையையும் தாக்கல் செய்யும் அரிதினும் அரிதான பொன்னான வாய்ப்பினை எனக்கு அளித்ததற்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**<u>எல்லாம் ஆயிரம் ஆயிரமாய்</u> -**

**"அடிசில் வைகல் ஆயிரம் அறப்புறமும் ஆயிரம்**
**கொடியனார் செய் கோலமும் வைகல்தோறும் ஆயிரம்**
**மடிவுஇல் கம்மியர்களோடும் மங்கலமும் ஆயிரம்**
**ஒடிவுஇலை வேறுஆயிரம் ஓம்புவாரின் ஓம்பலே".**

**...... (சீவகசிந்தாமணி. 76)**

வளம் நிறைந்த நாட்டில் உள்ள ஊர்களில் நாள்தோறும் கிடைக்கும் உணவு வகைகள் ஆயிரம்; அறச்சாலைகள் ஆயிரம்; அங்கே மகளிர் ஒப்பனை செய்துகொள்ள மணிமாடங்கள் ஆயிரம்; மேலும், செய்தொழிலில் சிறிதும் சோம்பல் இல்லாத கம்மியர் ஆயிரம்; அதனால் நிகழும் திருமணங்களும் ஆயிரம்; நாட்டில் தவிர்தலின்றிக் காவல் செய்யும் பாதுகாவலரும் ஆயிரம் எனும் திருத்தக்கதேவர் அவர்கள் **சீவகசிந்தாமணி** காப்பியத்தில் கூறியுள்ளதைப் போலவே, மக்களின் பசியையும் விவசாயிகளின் வறுமையையும் அறவே அழித்தொழித்தல், உணவுப் பாதுகாப்பை அளித்தல், ஊட்டச்சத்துள்ள உணவை வழங்குதல், வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், இயற்கை வளங்களைச் சிறப்பாகக் கையாளுதல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், வளங்குன்றாத வளர்ச்சியினை அடைதல் ஆகிய பணிகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் சிறப்பாக நடைபெற்று வரும் வேளாண்மை - உழவர் நலத்துறையின் பங்களிப்பினை மேலும் மெருகூட்டி, வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதே நான்காம் வேளாண் நிதிநிலை அறிக்கையின் மேன்மையான நோக்கமாகும்.

வரும் நிதியாண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப, அறிவிக்கப்பட்ட திட்டங்களில் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து, மேலும் சிறப்பாகத் திட்டங்கள் அனைத்தும் செயல்படுத்தப்படும்.

இந்த மகத்துவமான நான்காம் தனி வேளாண் நிதிநிலை அறிக்கையானது விவசாயத்திற்குத் தொடர்புடைய அனைவரையும் இணைக்கும் பலம் பொருந்திய பாலமாக இருக்கப் போகிறது என்பதை உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் மூன்று வேளாண் நிதிநிலை அறிக்கைகளையும் சீரிய முறையில் தயாரித்து இம்மாமன்றத்தில் சமர்ப்பித்தது போல, நான்காம் நிதிநிலை அறிக்கையினையும் பல்வேறு புதிய திட்டங்களுடன் உருவாக்கிட எனக்கு உறுதுணையாக இருந்த தலைமைச் செயலாளர் திரு.சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்களுக்கும், நிதித்துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு.த.உதயச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களுக்கும், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, இ.ஆ.ப., அவர்களுக்கும், துறைத் தலைவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

**வாழ்க தமிழ்! வாழ்க தமிழ்நாடு!**

**வளர்க வேளாண்மை !**

**நன்றி! வணக்கம்.**

## அட்டவணை- I

## வேளாண்மை மற்றும் சார்புத்துறைகளுக்கான 2024-2025ஆம் ஆண்டிற்கான மூலதனம் மற்றும் வருவாய் ஒதுக்கீடு

ரூபாய் ஆயிரத்தில்

| வ.எண். | துறை | BE 2023-24 | BE 2024-25 | | |
|---|---|---|---|---|---|
| | | மொத்தம் | மூலதனம் | வருவாய் | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | வேளாண்மைத் துறை | 10,772,03,13 | 111,92,54 | 11,082,54,93 | 11,194,47,47 |
| 2 | தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை | 1,395,21,44 | 6 | 1,621,60,26 | 1,621,60,32 |
| 3 | வேளாண்மைப் பொறியியல் துறை | 855,53,75 | 7,22,67 | 707,31,60 | 714,54,27 |
| 4 | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை | 277,71,46 | 10,48,86 | 199,41,48 | 209,90,34 |
| 5 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் | 616,68,93 | 15,00,00 | 649,31,89 | 664,31,89 |
| 6 | விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றளிப்புத் துறை | 61,99,12 | 0 | 70,77,50 | 70,77,50 |
| 7 | சர்க்கரைத்துறை | 253,52,52 | 0 | 254,06,20 | 254,06,20 |
| 8 | கால்நடை பராமரிப்புத்துறை | 1,062,32,02 | 47,69,85 | 1,040,52,78 | 1,088,22,63 |
| 9 | பால்வளத்துறை | 122,66,87 | 542,00,03 | 39,91,78 | 581,91,81 |
| 10 | மீன்வளம்-மீனவர் நலத்துறை (உள்நாட்டு மீன் வளம்) | 1,356,61,54 | 606,27,76 | 714,69,09 | 1,320,96,85 |

| வ.எண். | துறை | BE 2023-24 | BE 2024-25 | | |
|---|---|---|---|---|---|
| | | மொத்தம் | மூலதனம் | வருவாய் | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 11 | தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம் | 374,10,95 | 0 | 346,14,64 | 346,14,64 |
| 12 | தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகம், நாகப்பட்டினம் | 52,83,17 | 0 | 48,99,29 | 48,99,29 |
| 13 | கூட்டுறவுத் துறை (பயிர்க்கடன் போன்றவை) | 350,00,00 | 0 | 700,00,00 | 700,00,00 |
| 14 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் (நேரடி நெல் கொள்முதல் நிலையம்) | 10,501,74,96 | 1,14,00 | 10,500,00,00 | 10,501,14,00 |
| 15 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை (MGNREGS, ஊரக சாலைகள், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்) | 4,891,62,52 | 3,421,05,00 | 4,185,80,06 | 7,606,85,06 |
| 16 | உணவு பதப்படுத்துதல் (MSME) | 176,06,17 | 0 | 177,79,43 | 177,79,43 |
| 17 | பட்டு வளர்ச்சித்துறை | 90,59,90 | 0 | 111,12,28 | 111,12,28 |

| வ.எண். | துறை | BE 2023-24 | BE 2024-25 | | |
|---|---|---|---|---|---|
| | | மொத்தம் | மூலதனம் | வருவாய் | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 18 | வனத்துறை (வேளாண் காடுகள், மனித-விலங்கு மோதல்) | 1,087,19,81 | 456,77,25 | 651,16,30 | 1,107,93,55 |
| 19 | வருவாய்த்துறை (மாநில பேரிடர் நிவாரண நிதி, பயிர் சேதம், உழவர் பாதுகாப்புத் திட்டம் ) | 369,50,52 | 0 | 379,36,67 | 379,36,67 |
| 20 | கால்வாய்கள் புனரமைத்தல்-பெரும் பணிகள் | 4,236,47,28 | 3,581,73,64 | 0 | 3,581,73,64 |
| | **மொத்தம்** | **38,904,46,06** | **8,801,31,66** | **33,480,56,18** | **42,281,87,84** |